Registered as a News Paper  பக்கங்கள் 10  விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 06 [19 - 3 - 1993] வெள்ளிக்கிழமை ஓசை 29

## மகாபொல புலமைப்பரிசில் 27-ம் திகதி கிடைக்கும்

91/92 கல்வி ஆண்டுக்கு பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 241 மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் கிடைத்துள்ளது. இப்புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது. இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

( உணவு வாகனங்கள் வருவதற்கு )

# பூநகரிப் பாதையைத் திறந்துவிட சிறிலங்கா அரசாங்கம் இணக்கம்

## பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

( கொழும்பு )

யாழ். குடாநாட்டிற்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் செல்வதற்கென பூநகரிப் பாதையைத் திறந்துவிடுவதற்கு அரசாங்கம் கொள்கை அளவில் இணங்கியிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் இது குறித்துப் பேசிய பிரட்மன் வீரக்கோன்-

பூநகரி-சங்குப்பிட்டி பாதையைத் திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்த ஆலோசனைக்கு சிறிலங்கா அரசாங்கம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது. இப்பாதையூடாக வரையறுக்கப்பட்ட சில மணி நேரத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொண்டு செல்ல அனுமதி அளிப்பது எனவும், ஆனால் இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது எனவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பாதை திறப்பது தொடர்பான நடவடிக்கையில் ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் ஈடுபட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இப்பாதை திறப்பதற்கு இருபகுதியினரும் சம்மதம் தெரிவித்ததாக ஐ. நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய அதிகாரி ஊர்ஜிதம் செய்துள்ளார் என ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## ஐ. நா அதிகாரிகள் பூநகரி சென்றனர்

(கொழும்பு)

சங்குப்பிட்டி-பூநகரி பாதை தொடர்பாக நேற்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் பூநகரி இராணுவ முகாமிற்குச் சென்று ஆராய்ந்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சங்குப்பிட்டி-பூநகரி பாதை திறப்பது தொடர்பாகவும் நடைமுறையில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இப்பாதை எப்பொழுது திறக்கப்படும் என்பது குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்த உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள், தாம் யாழ்ப்பாணம் சென்றுவந்த பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரச்சாவு

### வீரவேங்கை நவமுரளி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை நவமுரளி ( திருத்

[10 ஆம் பக்கம் பார்க்க]

மாகாண சபைத் தேர்தல்

## ஏப்ரல் முதல் வாரத்தில் வேட்பு மனு தாக்கல்

(கொழும்பு)

ஒரேதினத்தில் ஏழு மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவ் ஏழு மாகாண சபைகளினதும் வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து 8ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்காவின் ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தல் மே 13க்கும் ஜூன் 3-ம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு-கிழக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண சபைகளிலும் நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க 90 லட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். 31 அரசியல் கட்சிகள் இத் தேர்தலில் போட்டியிட தம்மைத் தேர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநல அமைப்பு கண்காணிக்கும்

[கொழும்பு]

மாகாணசபை தேர்தல், 1994 ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தல், பொதுதேர்தல் என்பவற்றை பொதுநலவாய அமைப்பின் சர்வதேச குழு ஒன்று கண்காணிக்கும் என்று ''ஈவினிங் ஒப்சோபர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்திக்கு தேர்தல் ஆணையாளர் சந்தானடி சில்வா மறுப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தன்னுடன் அரசாங்கம் எந்த ஒரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி நினைவு இன்று முதல் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகச்சுடர் அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்கள் இன்றுமுதல் அடுத்த மாதம் 19ஆம் திகதிவரை தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்திய அரசினதும் அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழத்தை ஆக்கிரமித்த இந்திய அராஜகப் படைகளினதும் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்தும் சிறிலங்கா அரசின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்தும் சாகும் வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து தியாக மரணமடைந்த அன்னை பூபதிக்கு தமிழீழ மக்கள் இன்றுமுதல் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்துவர்.

ஒரு மாதகால அஞ்சலி நிகழ்ச்சிக்காக தமிழீழத்தின் அனேக பகுதிகளிலும் ஏற்கனவே ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும், பிரதான வீதிகளிலும், பொது இடங்களிலும் எழுச்சிக் கோஷங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

அத்துடன் சனசமூக நிலையங்கள், பொது இடங்கள், மாதர்சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களிலும் அலங்கரிக்கப்பட்ட விசேட பந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

பிரதேச ரீதியாக நாளை பின்வரும் இடங்களில் மீட்பு நிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளதாக தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

வலிகாமம் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் காலை 11-00 மணி தொடக்கம் 12-00 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயம்.

தென்மராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 2-00மணி தொடக்கம் 3-00மணி வரை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம். 3-30 மணி தொடக்கம் 4-30 மணி வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

தென்மராட்சி பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

## வவுனியா காட்டுப்பகுதியில் 'புக்காரா' குண்டுவீச்சு

(வவுனியா)

வவுனியாக் காட்டுப்பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானம் ஒன்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வவுனியாவில் உள்ள ஈச்சங்குளம் எனும் இடத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதிகளை மையமாகக் கொண்டு சிறிலங்காவின் புக்காரா விமானம் இரண்டு குண்டுகளை வீசியது. இக்குண்டுகள் வெடித்தசத்தங்கள் பலமைல் சுற்றுவட்டாரங்களை அதிரவைத்த போதும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

பாதுகாப்புச் செயலாளர்

## நியமனத்தின் பின்னர் நடவடிக்கை அதிகரிக்கும்

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் நியமனத்துடன் வடக்கு கிழக்கு பகுதிகளில் புதிய உத்வேகத்துடன் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளராக இருந்த ஜெனரல் சிறில் ரணதுங்க இலங்கைக்கான தூதுவராக வெளிநாடு செல்ல இருப்பதால் அப்பதவி வெற்றிடமாகவுள்ளது.

## 4 இராணுவம் கடந்த வாரம் பலி

[கொழும்பு]

மன்னார், திருக்கோணமலை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த வாரம் நடைபெற்ற மோதல்களில் நான்கு இராணுவத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்க

### சர்வமதகுழு பிரேமாவிடம் வற்புறுத்து

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வொன்றைக் காணும்படி சர்வமத குழுவொன்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை கேட்டுள்ளது. இம்மாதம் எட்டாம் திகதி இது தொடர்பான மகஜரொன்று பிரேமதாசாவிடம் ஒப்படைக்கப்பட்டதாக இச்சர்வமதக் குழுவின் தலைவர் சென்னையில் தெரிவித்தார்.

இச்சர்வமதக்குழு தற்போது தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்

### ஸ்ரீலங்கா அச்சகம்
(புத்தகசாலையல்ல)

ஸ்ரீகாந்தா அச்சக லேன்-ராஜா தியேட்டர் அருகாமை தனது சொந்த இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கின்றோம். 234A, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (4457)

### மீண்டும் இயங்குகிறது

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம். எம்மிடம் சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

### பாலராசிரியராக

பாலராசிரியராக வர க. பொ. த. (சா/த.) சித்தியடைந்தவர்கள் தபால் வழியிலும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நேரிலும் பயிற்சி பெறலாம். விபரங்களுக்கு வரும் சனிக்கிழமை முற்பகல் 10-00மணிக்கு சந்தித்தும் ஆவனசெய்யலாம். பாலர் ஆசிரியர் சங்கம், 73 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (4502)

### பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ படக்கசட்டுக்கள்பங்கஸ், தூசி படிந்துள்ளதா? மேலும் படிந்து பழுதடைய முன் அதற்கென தயாரிக்கப்பட்ட கருவி மூலம் சிறந்தமுறையில் துப்புரவு செய்து கொள்ள வீடியோஸ்ரார் இல 7/6, பிறவுண் வீதி, முதலாம் லேன், யாழ்ப்பாணம். (4481)

### ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்

''வாமதேவன்'' எழுதிய இந்த நாவல்... திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம், இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது, இதயம் சிலிர்க்கிறது, மானம் உயிர்க்கிறது. (4511)

### மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்

''சிதம்பர திருச்செந்திநாதன்'' எழுதியஇந்தநாவல் .. சோதனைகள் நிறைந்த காலத்தில் வாழ்ந்தாலும் தளராத மன உறுதியுடன் இந்த மண்ணைநேசித்து மானமுடன் வாழ முனையும் குடும்பத்தின் கதை ... (4510)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், எலக்ரோனிக் ஒட்டோ மற்றிக் கடிகாரங்கள் மேசை, சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்3, கண்டிவீதி (இலங்கை வங்கி அருகாமையில்), சாவகச்சேரி. (சி-6126)

### நீமோல்-கிருமிநாசினி

நீமோல் இல்லங்கள், பாடசாலைகள் மற்றும் வைத்திய சாலைகள் பொதுஇடங்களில் மலசலகூடம், குளியலறைகளில் கிருமிகள், கரப்பான் பூச்சி அண்டாது பாதுகாக்கிறது. விலை. ரூபா.70/- மட்டுமே. ''மில்க்வைற்'' (சி/6222)

# நினைவு கூருகின்றோம்...

## 1993-03-19

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **பேரின்பம்** (சுந்தரலிங்கம் பேரின்பராசா - தம்பிலுவில் - அம்பாறை)

1988ஆம் ஆண்டு அம்பாறை - விநாயகபுர பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரமணி** (வேலுப்பிள்ளை ஜீவராசா - தம்பிலுவில் அம்பாறை)

இதே சுற்றிவளைப்பின் போது தனது கைக்குண்டை வயிற்றில் வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**நிதி** (செல்வநாயகம் கருணாநிதி-தம்பிலுவில்அம்பாறை)

1989ஆம் ஆண்டு பருத்தித்துறை புலோலி புற்றளைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்டசமரில்வீரச்சாவெய்திய-

**லெப். பவான்/ராஜன்** (சரவணானந்தன் பவானந்தன் - வி. எம். வீதி - பருத்தித்துறை)

**றொசான்** (நடேசன் சிவதாசன் - பாலாவத்தை புலோலி தெற்கு - பருத்தித்துறை)

**ஹரி** (கனகவேற்பிள்ளை ஹரிகரன் - ஞானத்தோட்டம் புலோலி தெற்கு, பருத்தித்துறை)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த -

**லோறன்ஸ்** (இரத்தினம் இராசலிங்கம் - 37ஆம் கிராமம், பக்கியெல்ல - மட்டு.)

1991ஆம் ஆண்டு மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப் படைமுகாம் தகர்ப்பு யுத்தத்தின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய -

**கரும்புலி மேஜர் டாம்போ** (காசிப்பிள்ளை தயாபரன் - நாச்சிக்குடாச்சந்தி - மன்னார்)

மற்றும் இதே சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ஜெறோம** (வைத்திலிங்கம் அந்தோனிதாஸ் - மருத்துவமனை வீதி, - மன்னார்)

**கப்டன் கஜன்** (செபஸ்தியாம்பிள்ளை விஜயராசா - வண்ணான்குளம், அடம்பன், மன்னார்]

**லெப். குட்டி** (கணபதி தங்கராசா - ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டு.)

**ஜின்னா** (கா. கோபாலபிள்ளை - களுவாஞ்சிக்குடி - மட்டு.)

**சுந்தர்** (செபமாலை மரியதபேந்திரன் - பாடசாலை வீதி, 4-ம் வட்டாரம் - சீனன்குடா - திருமலை)

**கனகன்** (கந்தசாமி ரஞ்சித்குமார் - நேரியகுளம், வவுனியா)

**ஜெயசக்தி** (யூடிற் ராதிகா குணரத்தினம்-செல்வபுரம் - முல்லைத்தீவு)

**பஸ்ரியன்** (அழகையா தேவராசன் - தாமரைக்குளம், அடம்பன், மன்னார்)

**இளங்கோ** (சாமித்தம்பி கண்ணன் 5-ம் கட்டை எருக்கலம்பிட்டி - மன்னார்)

**2ம்-லெப். நிலாரவி** (சவரிஅன்ரன் ஜெயசீலன் - முதலைக்குத்தி - உயிலங்குளம் - மன்னார்)

**பூபால்** (ஞாகேஸ் வடிவேல் - வாழ்க்கப்பட்டான் கண்டல், நானாட்டன் - மன்னார்)

**மேஜர் செட்டி/பிரதாப்** (கந்தசாமி செல்வக்குமார் - பொன்னாலை, சுழிபுரம் - யாழ்.)

**லெப். குட்டி** (இராசநாயகம் ஜஸ்ரின் -41/21 மத்யூஸ் வீதி - யாழ்.)

**லெப். வாணி** (சிவராணி செல்லத்துரை - கச்சாய் வீதி, சாவகச்சேரி)

**2ம்லெப். ராஜீ** (நவநீதநாதன் சுரேஸ்குமார் - தேவாலய வீதி, சங்கானை - யாழ்.)

**நளினி** (புவனேஸ்வரி சின்னத்தம்பி- மீசாலை வடக்கு - சாவகச்சேரி)

**காவேரி** (நிரஞ்சினி வைரமுத்து - பொன்மணி நிலையம், அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

1992ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் 3-வது நாளாக மேற்கொண்ட ''ஒப்பரேசன் கஜபார'' நடவடிக்கையின்போது நிகழ்ந்த கடுஞ்சமரில் வீரச்சாவடைந்த -

**2-ம் லெப். அறத்திருவன் / ஆனந்தன்** (சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை - மேகலாவீதி, 2-ம் குறிச்சி தம்பிலுவில் - அம்பாறை)

**2-ம் லெப். திருச்செல்வம்** (நாகமணி பிரேமானந்தம் - பாண்டிருப்பு, கல்முனை - அம்பாறை)

**எல்லாளன்** (நாதன் நாதசிறி - அக்கரைப்பற்று - அம்பாறை)

**லெப். ஒள்ளியன்/ஆனந்தகுமார்** (சீனித்தம்பி கனகரெட்ணம் - பழுகாமம் - மட்டு.)

**லெப் புலித்தேவன்/அமுதன்** (செல்வம் செல்வேந்தன் - பன்குடாவெளி - மட்டு.)

**2-ம் லெப். யோகேந்திரன்** (பொன்னம்பலம் ஆனந்தன் - துறைநீலாவணை - மட்டு.)

**2-ம் லெப். அசோகன்** (சுப்பையா யோகராசா - மாங்காடு - மட்டு.)

**லெப். புகழ்வேந்தன் / சளன்** (நாகராசா சிவனேசன் - மணற்சேனை, மூதூர் - திருமலை)

**2-ம் லெப். வாமன்** (சிவலிங்கம் லிங்கன் - மாவடிச்சேனை, மூதூர் - திருமலை)

**2-ம் லெப். இளங்கோ** (சித்திரவேல்அசோக்குமார் - கட்டைபறிச்சான், மூதூர் - திருமலை)

**இளங்குமணன்** (சுப்பிரமணியம் மகேந்திரன் - தம்பலகாமம் - திருமலை)

**2-ம் லெப். ரஞ்சித்குமார்** (குருசாமி தவராசா - சொர்ணபுரி, அடம்பன் - மன்னார்)

**2-ம் லெப். சந்திரன்** (இராசு ஆறுமுகம் - நெழுக்குளம் - வவுனியா)

**தில்லையழகன்/கிட்டினன்** (கறுப்பையா சிவகுரு பெரியதம்பனை - வவுனியா)

**லெப். இராகவன்** (ஐயாத்துரைசிவகுமாரலிங்கம் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**2-ம் லெப். செல்லத்துரை/விக்னா** மகாலிங்கம் பாஸ்கர் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**தமிழ்மாறன்** (அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ்- தண்ணீரூற்று-முள்ளியவளை முல்லைத்தீவு)

**மேஜர் ஜெயகரன்/சாள்ஸ்** (கந்தையா ஐங்கரன் - கல்வெட்டித்திடல் கரைச்சி புளியம்பொக்கணை - பரந்தன்)

**கப்டன் சிவராஜ்** (குமாரலிங்கம் மோகனதாஸ் - இத்தாவில் - பளை)

**2-ம்லெப். ஜெயா** (மாணிக்கம் தியாகராசா - உருத்திரபுரம் - கிளிநொச்சி)

**கப்டன் பாவலன்/உருத்திரா** (சற்குணநாதன் ஜீவரத்தினம் - மயிலிட்டி காங்கேசன்துறை)

**இளம்வழுதி** (அந்தோனிமுத்து டொமினிக் - வீடமைப்புத்திட்டம் நாவற்குழி - யாழ்.)

முல்லைத்தீவில் எமது காவலரண் ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ஆதவன் / ஜேம்ஸ்** (சுப்பிரமணியம் பிரபாகரன் - முள்ளிவாய்க்கால் மேற்கு முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம் .

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6219)

# புறநிலைப்படிப்புகள் அலகு

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் பொது விரிவுரைத் தொடர்களையும் கற்கை நெறிகளையும் நடப்பாண்டில் நடாத்தவுள்ளது. வார இறுதி நாட்களில், பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள இவ் வகுப்புக்களில் பங்குகொள்வோருக்கு கல்வித்தகைமைச் சான்றிதழ் எதுவும் தேவையில்லை. ஆர்வலர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட அனைத்து விபரங்களையும் கொண்ட விண்ணப்பப்படிவம் மூலம், கற்கைநெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

1. பொது விரிவுரைகள்

- 1.1 உணவும் ஊட்டச்சத்தும் (Food and Nutrition)
- 1.2 தற்கால அனைத்துலக விவகாரங்கள் (Contemporary International Affairs)
- 1.3 ஈழத்தில் தமிழர் வரலாறு (The History of Tamils in Sri Lanka)

2. கற்கை நெறிகள் (குறைந்தது 36மணித்தியாலங்கள்/ நான்கு வாரம்)

- 2.1. சிறுதொழில் முயற்சிகள் (Enterpreneurships and Small business)
- 2.2. தற்சார்புக் கிராமிய அபிவிருத்தி (Rural devlopment and Self reliance)
- 2.3. செயல்திட்ட செயல் முறைகள் (Project planning Process)
- 2.4. பெண்களும் அபிவிருத்தியும் (Women and development)
- 2.5. பத்திரிகைக்கலை (Journalism)
- 2.6. உளவளத்துணை ஓர் அறிமுகம் (Introduction to counselling)
- 2.7. வானியலும் சோதிடக்கலையும் (Astronomy and Astrology)
- 2.8. ஈழத்தில் நவீன தமிழ் ஆக்க இலக்கியங்கள் (Modern creative Tamil Literature in Sri-Lanka)
- 2.9. தற்கால அரங்கியலும் நாடகமும் (Contemporary Drama and Theatre)

### புலமை வளத்தினர் (Resource persons)

மேற்படி தலைப்புக்களில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை வளத்தினராகப் பணியாற்ற விரும்பும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுள்ள புலமைசான்றோர் தங்கள் தகைமை விபரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப்படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி:- 16- 03- 1993
புறநிலைப்படிப்புகள் அலகு
யாழ்ப்பாணம்.
[சி, 6218]

# அன்றைய அரச பாரம்பரியமும் இன்றைய போராட்டமும்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வெளியீடாக, பல்வேறு ஆய்வாளரின் ஆக்கங்களைக் கொண்ட தொகுப்பாக, ஆரிய சக்கரவர்த்திகளின் காலத்தில் வாழ்ந்த யாழ்ப்பாண மனிதனையும் அவனது சமூக. பண்பாட்டு வாழ்வையும் சித்தரிக்கும் வரலாற்றுப் பதிவேடாக 'யாழ்ப்பாண இராச்சியம்' என்ற நூல் வெளியாகியிருக்கிறது.

புதிய ஆய்வுகள் மூலம் எமது இருண்ட பழமைக்கு ஒளியேற்றும் முயற்சிகள் வரவேற்கத்தக்கது; பாராட்டுக்குரியது.

வரலாறு பற்றிய ஒரு தெளிந்த தரிசனம், வரலாற்று ஆய்வுமுறைமை பற்றிய ஒரு திண்ணியமான அறிவியல் பார்வை, சுயவிருப்புச் சலனங்களற்ற புறநிலை நோக்கு, சமூகவியல் பற்றிய ஒரு ஆழமான கண்ணோட்டம்-இவை ஒரு வரலாற்றாசிரியனுக்கு இருக்கவேண்டிய அறிவுசார் பண்பியல்புகள். காலத்தில் யாத்திரை செய்து கடந்த கால மெய்யுண்மைகளைக் கண்டுகொள்வதற்கு இந்தப் புலமைத் தகைமைகள் இன்றியமையாதவை. இல்லாதுபோனால், ஒரு வரலாற்றுக் காலகட்டத்தை அதன் ஆழத்திலும் அகலத்திலும் அதன் எதார்த்த கோலத்திலும் தரிசித்துக்கொள்வது கடினம்.

வரலாறு என்பது செத்துப்போன காலத்தின் புதை குழிக்குள் உக்கிப்போன எலும்புகளைத் தேடுவதல்ல. கடந்துபோன நிகழ்வுகளை கால வரிசையில் நிரைப்படுத்தி விடுவதும் வரலாறு ஆகிவிடாது. வரலாறு என்பது மனித சமூக வாழ்வியக்கம் பற்றியது. அந்த அசைவியக்கத்திற்கும் மாற்றத்திற்கும் உந்தியல்பான தன்மைகள், சக்திகள், விதிகள் பற்றியது.

'யாழ்ப்பாண இராச்சியம்' எந்த வகையில், எந்த அளவிற்கு எந்த ஆழத்திற்கு இந்த வரலாற்றுப்பதிவை செய்துகொள்கிறது எனப் பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அதாவது, இந்நூலை அதன் முழுமையில், அதன் பல் - பரிமாண அம்சங்களில் விசாரணைசெய்து விமர்சிப்பது எனது குறிக்கோளல்ல. இந் நூலின் வரலாற்று அறிமுகத்தில், ஈழத்து வரலாற்றுப் பின்னணியில், சமகால அரசியல்பற்றி பதிப்பாசிரியர் எடுத்தியம்பும் கருத்துக்கள் பற்றி விமர்சிப்பதே எனது நோக்கம்.

## 'யாழ்ப்பாண இராச்சியம்' பற்றி சில குறிப்புகள்

பல்வேறு ஆய்வாளரின் கூட்டு ஆக்கமாக படைக்கப்படும் ஒரு வரலாற்றுக் குறிப்பேட்டிற்கு அறிமுகம் எழுதுவதில் சில அறிவியல் பண்பு நெறிகள் பேணப்படுவது அவசியம். இந்தப் பண்பு நெறிகளை உதாசீனம் செய்து. நூலின் உள்ளடக்கத்திற்கு அப்பால் சென்று, வரலாற்றுக் காலத்தின் வரம்புகளைக் கடந்துநின்று, சமீபகால அரசியல் பற்றி சுயவியாக்கியானம் செய்வது பதிப்பாசிரியரின் புறநிலை நோக்கை கேள்விக் குறிக்குஇலக்காக்கியுள்ளது. இந்த தனிமனித அரசியல் தலையீடு நூலின் தகைமையையும் புலமைத்துவத்தையும் பங்கப்படுத்தலாம் என்பதால் பதிப்பாசிரியர் இதனைத் தவிர்த்திருக்கலாம். ஆயினும் ஆரிய சக்கரவர்த்திகளின் அரச பாரம்பரியத்துடன் அமிர்தலிங்கத்தின் அரசியலை தொடர்புபடுத்திக் காட்டவேண்டுமென்ற அங்கலாய்ப்பில் அவரது நிதானம் தளம்பிவிடுகிறது.

படிநிலைகளாக. பரிணாம வளர்ச்சி கண்ட தமிழ்த் தேசியத்தின் உருவாக்கத்திற்கு அகிம்சை முறையிலும் ஆயுத வடிவிலும் எழுச்சிகொண்ட அரசியல் போராட்டங்கள் உந்து சக்தியாக அமைந்தன. இந்த வகையில். ஒரு வரலாற்றுக் கட்டத்தில் திரு. செல்வநாயகத்தின் தலைமையில் செயற்பட்ட தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சிக்கு குறிப்பிட்ட பங்களித்தது. அக்காலகட்டத்தின் வரலாற்றுப் புறநிலைகள், நிர்ப்பந்தங்கள். வெளியுலக நிலைமைகளுக்கு அமைய இந்தப் பங்கினை மதிப்பாய்வு செய்ய வேண்டும். ஆனால் யாழ்ப்பாண இராச்சியத்தினதும் திரு. செல்வநாயகத்தினதும் அரசியல் பாரம்பரியத்தினை அமிர்தலிங்கம் முன்னெடுத்துச் சென்றார் என்ற தொனியில் ஒரு கருத்து நிலையை உருவாக்க முனைவது தவறானதாகும். இந்தப் பாரம்பரிய தொடர்பினை நிலைநாட்ட யாழ்ப்பாண அரசின் மகிமையும் பெருமையும் பற்றி அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையொன்றை நீண்டதொரு பந்தியாக கலாநிதி சிற்றம்பலம் மேற்கோள் காட்டுகிறார் இந்த உரையில் அமிர்தலிங்கம் தமிழ்ராஜ்யத்தின் பண்டையபுகழ்பாடியபோதும், நல்லூர் ராஜதானியைப்புனரமைப்பதற்கு மாவட்ட சபைக்கு ஓரளவு அதிகாரமாவது தருமாறு ஜெயவர்த்தனாவிடம் மன்றாடுகிறார் என்பதை பதிப்பாசிரியர் உணரவில்லைபோலும். இந்தப் பாராளுமன்ற உரையில் ஒரு பந்தியில், ''அதிஉத்தம ஜனாதிபதி அவர்களே, தங்களுடைய அரசாங்கம் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம்மக்களுக்கு ஓரளவுஅதிகாரத்தைக் கொடுத்து அதிகாரத்தைப் பரவலாக்க அச் சபைகளை மாவட்டம்தோறும் நிறுவியிருக்கிறது. எனவே, யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு இந்த நல்லூர் ராஜதானியைப் பாதுகாத்து புனரமைக்கும் அதிகாரத்தை, வாய்ப்பை வழங்கவேண்டும்...''என்று இரங்கிறார் அமிர்தலிங்கம். தமிழரசுக் கோரிக்கையைக்கைவிட்டு, மாவட்ட சபையை ஏற்று. அதற்கும் அதிகாரம் போதாதென 'அமிர்தலிங்கம் புலம்புவதை தமிழர் ஆட்சியின் பாரம்பரிய தொடர்பாகக் காட்டுவது கேலிக்கூத்தாக இருக்கிறது.

1983ல் ஆறாவது சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசாங்கம் பாராளுமன்றக் கதவுகளை அடைத்து விட்டதாகக் கூறும் கலாநிதி சிற்றம்பலம் எவ்வாறு அமிர்தலிங்கம் ஆறாவது சட்டத் திருத்த நிபந்தனைகளை ஏற்று, 1989ல், மீண்டும் பின் கதவால் பாராளுமன்றம் நுழைந்தார் என்ற விசித்திரமான கதையைக் கூறத் துணியவில்லை.

1985ல் திம்பு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற கோட்பாடுகள் 1949இல் தமிழரசுக்கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கருப்பெற்றது எனத் தொல்லியல் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு ஒன்றை நிகழ்த்திவிடும் கலாநிதி சிற்றம்பலம், ''இதன் பெறுபேறுதான் 1987இல் ஏற்பட்ட இந்திய -இலங்கை ஒப்பந்தமாகும்'' என்ற ஒரு அபத்தமான கருத்தை முன்வைக்கிறார்.

திம்பு மாநாட்டில் உண்மையில் என்ன நிகழ்ந்தது என்பதும். இந்திய -இலங்கை ஒப்பந்தம் எவ்வாறு, ஏன் கைச்சாத்தாகியது என்பதும் வரலாற்றுத்துறை தலைவருக்கு தெரியாமல் இருந்திருக்கலாம். ஆயினும் நல்லூர் அரச பாரம்பரியத்தை தமிழரசுக் கட்சியுடன் தொடர்புபடுத்தி, தமிழரசுக் கட்சியின் அரசியல் பாரம்பரியத்தை அமிர்தலிங்கத்துடன் தொடர்படுத்தி. 1949 ல் இருந்து 1987 வரை, கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்கள்வரை தமிழரசுக் கட்சிக்கு தொடர்ச்சியான ஒரு அரசியல் வரலாற்று மரபை சிருஷ்டித்து விட முனைகிறார் பதிப்பாசிரியர். மிகவும் நுட்பமாக செய்யப்பட்ட இந்த வரலாற்றுத் திரிபில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் - ஆயுதப் போராட்ட வரலாறு இருட்டடிப்புச் செய்யப்படுகிறது.

திம்பு மாநாடு பற்றி ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன். திம்பு மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னராக, ஈழத் தமிழினத்தின் ஏகோபித்த கோரிக்கையாக திம்புவில் முன்வைப்பதற்காக தமிழீழ சுதந்திர சாசனம் ஒன்றை விடுதலைப்புலிகள் இயக்கம் தயாரித்தது இந்தசாசனத்தில், தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகிய கோட்பாடுகளுக்கு தெளிவான வரைவிலக்கணமும் தமிழர் தேசிய பிரச்சினையில் அவை பெறும் முக்கியத்துவமும் விளக்கப்பட்டன. திம்புவில் இந்த சுதந்திர சாசனம் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட எல்லாத் தமிழ் அமைப்புகளுக்கும் கொடுக்கப்பட்டது சிலதமிழ் அமைப்புகள் இந்த சுதந்திர சாசனத்தை ஏற்றுக் கொள்ள முன்வந்த போதும், கூட்டணித் தலைவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பும் அதன் பின்புலத்தில் தலைதூக்கிய இந்திய அழுத்தமும் காரணமாக புலிகளின இந்த சுதந்திர சாசனம் கைவிடப்பட்டது. எனினும புலிகளின் வற்புறுத்தல் காரணமாக இந்த சாசனத்தின் அடிபபடைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ள சகல அமைப்புகளும் முன்வந்தன. இப்படியாகத்தான் திம்புக் கோட்பாடுகள் வரலாற்றுப்பதிவைப் பெற்றதே தவிர கலாநிதி சிற்றம்பலம் கற்பிதம் செய்வதுபோல 1949-ல் கருப்பெற்று 1985-ல் உருப்பெறவில்லை.

### பிரம்மஞானி

இந்திய அரசின் தெற்கு நோக்கிய வல்லாதிக்க அகற்சியின் வெளிப்பாடாக உருவகம் பெற்ற இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அதன் ஆழத்திலும அகலத்திலும் பார்க்காமல், ஏதோ ஈழத் தமிழரின் நலனுக்கும் நல்வாழ்விற்குமாக ரஜீவும் ஜே ஆரும் கூட்டுச் சேர்ந்து கொடுத்த நன்கொடையாக கருதுகிறார் பதிப்பாசிரியர். இரு அரசுகள் கைச்சாத்திட்டுள்ளதால் ஒன்றின் ஒப்புதலின்றி மற்றதுகிழித்தெறியமுடியாதவாறு வலிமை பெற்றிருப்பதோடு நடைமுறைச் செயலாக்க சக்திபெற்றிருப்பதாகவும் ஒப்பந்தம்பற்றி அவர் புகழ்பாடுவது நகைப்புக்கிடமாக இருக்கிறது.

இந்திய -இலங்கை ஒப்பந்தம் செத்துப்போய் நீண்ட காலமாகிறது. அதன் சாவுக்கு அதுவே காரணமாகவிருந்தது. அது கிழிக்கப்படாமலே உக்கிபோன தாளாகி உருக்குலைந்து போனது அதன் ஈமக்கிரியைகளுக்காக பிரேமதாசா டில்லி சென்று வந்ததும் பதிப்பாசிரியருக்குதெரியவில்லைப் போலும். நிலைமை அப்படியிருக்க அதன் வலிமை பற்றியும் வீரியம்பற்றியும் பேசுவது அபத்தமானது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுக் குடிநிலம் எனக் குறிப்பிட்ட போதும் இலங்கைத் தீவின் பூகோள முழுமையையும், இறைமையையும், ஐக்கியப்பாட்டையும் வலியுறுத்தத் தவறவில்லை. அத்துடன் இலங்கையின் பல்லினப் பன்மைக் கோட்பாட்டை அங்கீகரித்து தமிழரின் தேசிய தனித்துவத்தை நிராகரித்து விடுகிறது. இந்த ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்த போதும், கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பிற்கு இடமளித்து, தமிழர் தாயகத்தை நிரந்தரமாகப் பிரித்துவிடும் ஆபத்தான விதியையும் கொண்டிருந்தது. இந்தப் பாரதூரமான குறைபாட்டினைக் கருத்தில் கொள்ளாமல் தற்காலிக இணைப்பை தமிழர் தாயகத்திற்கு கிடைத்த அங்கீகாரமென பதிப்பாசிரியர் பெருமிதம் கொள்வதில் அர்த்தமில்லை.

மாகாண சபைத் திட்டமானது தமிழரின் தேசிய பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் தொட்டு நிற்கவில்லை என்பதாலும், தமிழரின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும்வகையில் அதிகாரப்பகிர்வு அமையவில்லை என்பதாலும் விடுதலைப்புலிகள் இயக்கம் இதனை ஏற்க மறுத்தது. இத்திட்டத்தை சட்டமாக்கிய 13வது யாப்புத் திருத்தத்தின் அதிகார வெறுமை பற்றி விடுதலைப்புலிகள் இயக்கம் நிறைய எழுதியிருக்கிறது. மாகாணசபையின் சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்கள் மிகவும் வரையறுக்கப்பட்டவை என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறது. மைய அரசிடம், குறிப்பாக ஜனாதிபதியிடம் ஏகபோக அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதால் மாகாண சுயாட்சிக்கு அது வழிகோலப்போவதில்லை என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கிறது. நீண்ட காலமாய் இரத்தம் சிந்திப் போராடி, எலும்பும் சதையுமற்ற வெறும் ஓடாக ஒரு தீர்வுத் திட்டத்தை ஏற்பதில் அர்த்தமில்லை என்பதையும் எடுத்துவிளக்கியிருக்கிறது. எனவே, இந்தியாவின் அழுத்தத்திற்குப் பணிந்து தமிழரின் தேசிய நலனை மறுதலிக்க புலிகள் இயக்கம் விரும்பவில்லை. சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்திற்கு சுயாட்சி கொடுத்து தமிழருக்கு நீதி வழங்கும் எனப் புலிகள் நம்பவில்லை.

''விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் பரீட்சார்த்தமாகவேனும் இதனை சிறிதுகாலம் அமுல் நடத்தித் தமிழ மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளை இது எவ்வாறு பூர்த்தி செய்யவில்லை என்பதை எடுத்துக்காட்டும் வாய்ப்பையும் இது இழந்து விட்டது'' எனக் கவலைப்படுகிறார் பதிபபாசிரியர். புலிகள் அப்படிச்செய்திருந்தால் மண்குதிரையை நம்பி ஆற்றில்இறங்கியவன் கதைபோல அது முடிந்திருக்கும்.

இந்தியாவின் ஒரு லட்சம் இராணுவத்தின் பக்க பலத்தோடும், இருஅரசுகளின் உடன்பாட்டு வலிமையோடும், எட்டப்பர் குழுக்களின் ஒத்துழைப்போடும் இந்த ஒப்பந்தம் ஒரு வருடத்திறகு மேலாக பரீட்சார்த்த செயலாக்கம் பெற்றும் தமிழரின் அபிலாசைகள் எதையும் அது பூர்த்தி செய்யவில்லை. இதனை வரதராஜாப் பெருமாள் மட்டுமன்றி ஒப்பந்தத்தின் சிருஷ்டி கர்த்தாவான ரஜீவ் காந்தியுமே ஒப்புக் கொண்டிருக்கிறார். நிலைமை அப்படியிருக்க பதிப்பாசிரியர் இப்படியொரு கற்பிதக் கனவு காண்பது விந்தையாக இருக்கிறது.

செயலாக்க விவகாரத்தில், இந்திய அரசு கொழும்பு மீது அழுத்தம் பிரயோகிக்கப் பின்னின்றதுஎனக் கூறும் கலாநிதி சிற்றம்பலம் ''புலிகளுடன் கொண்டிருந்த முரண்பாடும் தொடர்ந்து கொண்டிருந்த இராணுவ நடவடிக்கைகளும் இந்திய அரசின் அணுகுமுறைக்கு ஒரு காரணமாயுமிருக்கலாம்'' என்கிறார். மிகவும் நுட்பமாகச் செதுக்கிய வார்த்தைகளில் இங்கு புலிகள் மீது மறைமுகமாக பழி சுமத்தப்படுகிறது. அதாவது இந்தியாவின் அசமந்த போக்கிற்கும் ஒப்பந்த செயலாக்க தோல்விக்கும் புலிகளேகாரண கர்த்தாக்கள் என்பது போல அவரது கருத்து அமைகிறது.

இந்தியாவின் இதயத்தில் இன்னும் காந்தீய ஆன்மாவைக் கண்டுகொள்ளும பாரத பக்தர் ஒருவரின் அங்கலாய்ப்பு இங்கு தெரிகிறது. நவ இந்தியாவின் நரசிமம கோலத்தைத் புரிந்து கொள்ள முடியாது பழமையில் புதைந்துபோன வரலாற்றாசிரியர்களால் சமகால அரசியலின் சுழிவு நெழிவுகளை துல்லியமாக கிரகித்தறிவது சிரமம். ஈழத்தமிழரின் தேசிய விமோசனத்திற்கு இந்தியாவை நம்பி ஏமாந்து போன விரக்தியில் பதிப்பாசிரியர் புலிகளைச் சாடுகிறார். ஆனால் ஒப்பந்தத்தின் சாவுக்கு புலிகள் காரணமல்ல. ஒப்பந்தத்தை பீடித்திருந்த நோயே காரணம். ஒப்பந்தத்தை எழுதியவர்களே ஒப்பந்தத்தின் சமாதியையும் கட்டிவிட்டார்கள்.

இலங்கையில் இந்தியாவின் தலையீடு தோல்வியடைந்தமைக்கு இந்திய விமர்சகர்கள் கூட இந்தியா மீதே பழியைச் சுமத்துகிறார்கள். புலிகளின் தாயக நேசத்தை இந்தியா புரிந்துகொள்ளவில்லை எனச் சாடுகிறார்கள். ஒப்பந்தத்திலுள்ள ஓட்டைகளும், இந்தியாவின் விவேகமற்ற அணுகுமுறையும் சிங்களப் பேரினவாதத்தின் சூழ்ச்சிகளுமே இந்திய தலையீட்டின் தோல்விக்கு காரணிகளாக இருந்தாக விமர்சிக்கிறார்கள். இந்தியப் புத்திஜீவிகளின் ஆய்வுகளைக்கூட கலாநிதி சிற்றம்பலம் கருத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழர் ஒருவர் முதலமைச்சராக கொலுவேற்றிருக்கும் வாய்ப்பை ஒப்பந்தம் அளித்ததாக பேராசிரியர் பெருமைபபடுகிறார்.

தமிழர் ஒருவருக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது. அந்தப் பெருமாளுக்கு முதலமைச்சராக நீடிக்கும் அரசியல் பசிஇருந்த போதும், மாகாண சபைக்கு அதிகார வறுமை இருந்ததால் அது சாத்தியமாகவில்லை. அதற்கு புலிகளைக் குறை கூறிப் பிரயோசனமில்லை.

# இரக்கத்துக்குரிய சிறிலங்காவின் வான்படை

**குலோத்துங்கன்**

மார்ச் 3. 1993 சிறிலங்கா வான்படையின் 43வது ஆரம்பநாள். காலை 9.30மணி. வடபகுதி வானில் இரண்டு குண்டு வீச்சு வானூர்திகள் வட்டமிட்டன. நாவாந்துறைக்கு அண்மிய காக்கைதீவு கடற்கரைக்கிராமத்தில் குண்டுகளை வீசின. இரண்டு குண்டுகள் கடலுக்குள் விழுந்தன. மற்றைய இரண்டு குண்டுகள் கடற்கரை ஓரத்து குடிமனைகளில் விழுந்தன. சிறிலங்கா வான்படையின் பிறந்தநாள் அன்று அவர்களால் முடிந்ததெல்லாம் மாக்கிரட் வனிதா என்ற சிறுபெண்ணை கொன்றது மட்டும் தான்.

ஃ ஃ ஃ

ஆகாயவிமானங்களின் கண்டுபிடிப்பானது அதுவரை இருந்த மரபுவழி போர்முறையில் பெரும் மாற்றத்தை கொண்டுவந்தது ஆரம்பத்தில் எதிரி தரப்பிற்குள் குண்டுகளை கொண்டு சென்று போடுவதற்கும், பாரசூட் துருப்பினர்களை தரையிறக்குவதற்குமாக பயன்பட்ட விமானங்கள் பிற்காலத்தில் எதிரி விமானங்களின் ஊடுருவலை தடுப்பதற்காக வான் சண்டைக்கு ஏற்ற மாதிரி மாற்றி அமைக்கப்பட்டன.

இன்று நாடுகளிடையேயான படைபலம் 'விமானப்படையின் பலத்தை வைத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறது. உலக வான்படை வரலாற்றில் இதுவரை நாளும் சில நாடுகளின் வான்படையினர் வியக்கத்தக்க சாதனைகளை படைத்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை கீழே பார்க்கலாம்.

இரண்டாம் உலகயுத்த காலத்தை ஒட்டித்தான் விமானப்படையின் பெருமெடுப்பிலான நடவடிக்கைகள் ஆரம்பமாகின. உலகயுத்தத்தின் ஆரம்ப நாட்களில் ஜெர்மனிய அரசின் வெற்றிகளுக்கு ஜெர்மனின் விமானப்படை பெரும் பங்கு வகித்தது. இதில் அதிசயம் என்னவென்றால் கிட்லரின் விமானப்படையினர் 'மின்னல் வேக யுத்த' தந்திரத்தின் படி வானாதிக்கத்தை எப்போதும் தம்வசம் வைத்திருந்தார்கள்.

லண்டன் மீதான தொடர் தாக்குதலின் போதும், பிரான்ஸ், கிறீட் தீவு, சோவியத் யூனியன் மீதான தாக்குதல்களின் போதும் ஜெர்மனி விமானப்படையினர் மிகவும் திறமையாகச் செயற்பட்டனர்.

சோவியத்துடனான போரை பீரங்கிகளின் முழக்கத்திற்கு முன்பாக ஜேர்மனிய போர் விமானங்கள்தான் ஆரம்பித்தன. இதில் வானாதிக்கத்தை வெல்வதற்குரிய அனைத்து வழிகளையும் ஜேர்மனிய விமானங்கள் பயன்படுத்தின. சண்டையின் முதலாவது நாளில் (1941ஜூன் 22) சோவியத்தின் 800 விமானங்கள் தரையில் வைத்தே அழிக்கப்பட்டன. மேலும் 400 விமானங்கள் வானிலஅழிக்கப்பட்டன. இதைவிட ஏராளமான விமானங்கள் சேதப்பட்டன. அன்றுடன் போரின் வானாதிக்கம் ஜேர்மனியர்களிடம் சென்றது.

அனேகமாகமற்றைய நாட்டு விமானப்படைகளின் சாதனைகளும் இரண்டாம் உலக யுத்தத்தில் நடந்தவையாகவே இருக்கின்றன. ஜப்பானிய வான்படையினரும் இவ்வுலக யுத்தத்தில் மிகப்பெரிய சாதனைகளைப் படைத்துள்ளார்கள். நடவடிக்கைகளின் போது பெருமளவில் போர் விமானங்களை இழந்திருந்தாலும் ஜப்பானிய காமிகாத்சே விமானிகள் தேடிச் செல்லும் இலக்குகள் பெரும்பாலும் தப்புவதில்லை அத்துடன் ஜப்பானிய கடற்படையினரின் பலம் முழுவதும் அவர்களின விமானந்தாங்கி கப்பல்களில் இருந்த போர் விமானங்களிலேயே தங்கி இருந்தன.

ஜப்பானிய விமானப்படையினரின் நடவடிக்கைகளில் அமெரிக்காவின 'பேர்ல்' துறைமுகத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கை இன்றும் வியக்கத்தக்கது.

1941 டிசம்பர்1: கடல்வெளிக்காத காலை நேரம். பேர்ல் துறைமுகத்திலிருந்து சரியாக 360 கி.மீ தூரத்தில் நின்ற 6 ஜப்பானிய விமானந் தாங்கி கப்பல்களிலிருந்து விமானங்கள் (353) பேர்ல் துறைமுகத்தை நோக்கி எழுந்தன.

துறைமுகமும் அதன் அருகிலிருந்த வான்படைத் தளமும் ஜப்பானிய விமானங்களின் கடும் தாக்குதலுக்கு ஆளாகின. விமான இரைச்சல் ஓய்ந்த பொழுது அப்பகுதி சிதைந்து சின்னாபின்னமாகி இருந்தது.

விமானத் தளத்தில் நின்ற 394 விமானங்களில் 272 அழிக்கப்பட்டிருந்தன கடலில் நின்ற 9 பெரும் போர்க்கப்பல்களில் 4 மூழ்கடிக்கப்பட்டிருந்தன 4 பெரும் சேதமடைந்திருந்தன. மற்றும் 50 இற்கும் மேற்பட்ட குரூசர்கள், நாசகாரிகள், சிறுகப்பல்கள் ஆகியனவும் சேதமடைந்திருந்தன.

அங்கு, வான்எதிர்ப்பு பாதுகாப்பு அமைப்பில் இருந்த294 விமானஎதிர்ப் பீரங்கிகளால் ஜப்பானியர்களின் 29 போர் விமானங்களைத்தான்வீழ்த்த முடிந்தது. அமெரிக்க கடற்படைமீதான இந்நடவடிக்கை பசுபிக் கடற்பரப்பில் கடலாதிக்கத்தை சில வருடங்களுக்கு ஜப்பானியர்களிடம் தந்தது. இதைவிட தீவுகளுக்கான சண்டைகளிலும் கப்பல்களுக்கிடையேயான சண்டைகளிலும் ஜப்பானிய புனிதக்காற்று (காமிகாத்சே) விமானிகள் தீரத்துடன் செயற்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாம் உலகயுத்தத்தின முற்பகுதி முழுவதும் ஜேர்மனிய, ஜப்பானிய விமானப்படையினரின ஆதிக்கம் வானில்பெருமளவில்இருந்தது ஆனால். நாட்கள் செல்லச் செல்ல நேசநாடுகளின் வளர்ச்சி பெரிதாகஇருந்தது.பொருளாதார வளமும் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சியும் போரில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த நேச நாடுகளுக்கு வாய்ப்பாக இருந்தது மற்றது ஜப்பானிய, இத்தாலிய பொருளாதாரத்தாலும் போருக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

இரண்டாம் உலகப்போரின் பிற்காலத்தில் தம்மை நன்றாக பலப்படுத்திக் கொண்ட நேச அணியினரின் வெற்றிக்கு விமானப்படையினரே காரணமாக இருந்தார்கள்.

ஜெர்மனிய ஆக்கிரமிப்பில் இருந்த பிரான்சின் நார்மண்டி தரையிறக்கம் நேச அணியினரால் பெரும் நடவடிக்கையாகக் கருதப்பட்டது

வான் வழியாக கடற்கரையை கடந்து எதிரிக்கு உள்ளே பாரசூட் படையினரை நேச அணியினர் இறக்கினர். இந்த வான் இறக்கு படையினர் பாலங்களை உடைத்து ஜெர்மனியர்களுக்கு உதவி வரக்கூடிய பாதைகளை காவல் காத்தனர் 23 விமானதளங்களை கைப்பற்றி மேலதிக படையினர் இறக்கப்பட உத

வினர். இதே படையினர் கடல்வழி இறக்கத்துக்கும் பெரிதும் உதவினர்

இத்தரையிறக்கத்துக்குநேச அணியினரின விமானப் படையினர் பெரும் பங்காற்றினார்கள். நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு 90 நாட்களுக்கு முன்பே 'நடவடிக்கை களத்தை' நோக்கி குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசத் தொடங்கி விட்டன. இந்த நடவடிக்கையின் வெற்றிக்கு வானாதிக்கமே நேச அணியினருக்கு காரணமாக இருந்

தது. இத்தாக்குதலில் பங்குபற்றிய 10 859 போர், சண்டை, கிளைடர் விமானங்களுக்கு எதிராக ஜெர்மனியின் 324 விமானங்களால் எதுவுமே செய்ய முடியவில்லை.

நேச அணியினரின் பிரான்சு இத்தாலி, பெல்ஜியம் ஆகிய வெற்றிகளுக்கும் இவ்வணியினரின வான் மேலாதிக்கமே காரணமாக இருந்தது. சண்டையின் நீண்ட கால இழுபாட்டில் ஜெர்மன் தனது வான்படையின் இழப்பைஎதிரணிக்கு நிகராக ஈடு செய்யாமல்தவறியதும்இவ் வெற்றிகளுக்கு காரணமாகஇருந்தது.

ஆனால் ஜப்பானியர்களுடனான தீர்வுகளுக்கான சமர்களில் நேசப்படையினர் இவ்வளவு இலகுவாக வெற்றிகளை காணவில்லை. ஜப்பானிய புனிதக்காற்றுவிமானிகள்நேச அணி விமானங்களுக்கு அவர்களின் இறுதிவரைஆபத்தானவர்களாகவே இருந்தார்கள்.

'வேரக்கினாவா' தீவை நேச அணியினர் கைப்பற்றிய நடவடிக்கை இரண்டாம் உலகப் போரில் நடந்த பெரும் நடவடிக்கையாக கருதப்படுகிறது. ஜப்பானை விட எல்லா வலுவிலும் நேச அணியினர் விஞ்சி நின்றனர். ஆள் பலத்தில் 6 மடங்கும் விமானங்களைப் பொறுத்து 3 மடங்கும் கடற்படை சக்திகளில் பெருமளவும் நேச அணியினர் அதிகமாக இருந்தனர்.

ஆனாலும் 82 நாட்கள் போரிட வேண்டி இருந்தது. நேசநாட்டு கடற்படையால் சுற்றிவளைக்கப்பட்ட தீவிலிருந்து ஜப்பானியர்கள் கடுமையாக போரிட்டார்கள் ''புனிதக்காற்று''விமானிகள்பெரும் கப்பல்களை இலக்கு வைத்து தாக்கினார்கள். இதனால் போர் வியூகத்தை நேச அணியினர் மாற்றிஅமைக்கவேண்டி இருந்தது. அமெரிக்க விமானந்தாங்கி கப்பல்களிலிருந்த விமானங்கள் தங்கள் கப்பல்களை காப்பதற்காக நிரந்தர வான் திரை ஒன்றை அமைக்க வேண்டி இருந்தது.

ஜப்பானிய விமானிகளின் முயற்சிகளால் நேச அணியினர் தீவினுள் இறங்குவதை முறியடிக்க முடியவில்லை. ஏனெனில் இயந்திர சாதனங்களின் நவீனமின்மையால் பழைய இஞ்சின்களைகொண்ட விமானங்களை வைத்துக் கொண்டு அவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஆனாலும் 33 கப்பல்களை அவர்கள் மூழ்கடித்தார்கள். 370 கப்பல்கள் சேதமடைந்

தன 1000க்கு மேற்பட்டவிமானங்களை வீழ்த்தினர்.

ஜப்பானிய 420 இற்கு கூடுதலான விமானங்களும் இச் சண்டையில் அழிந்தன.

இதே போன்றே இழப்புகளுடனேயே லுசோன், இயோ தீவுகளையும் அமெரிக்கப்படைகள் கைப்பற்றின.

ஜெர்மனியின்மீதான ஓலுர் நடவடிக்கையின் போது நேச நாட்டு விமான அணிக்குமுன்பு ஜெர்மனிய வான்படை ஒரு கருத்தாகவே இருக்கவில்லை.

இவை அனைத்திலும்பார்க்க

இ. உ. போரின்போது சோவியத் விமானப்படையின் சாதனைகள் அனைவராலும் வியக்கப்படுகின்றன. சோவியத் விமானிகளின் தேசபக்தியே இவ் வெற்றிகளுக்கான அடித்தளமாகிறது. போரில் காயப்பட்டு விழப்போகும் விமானத்தை எதிரியின் வாகன ரோத்தின் மீது மோதவே ஒவ்வொருவிமானியும் விரும்பினான். தான் தப்புவதை அவன் சிந்திக்கவில்லை.

ஸ்ராலின் கிராட், லெனின் கிராட் போர்முனைகளில் சோவியத் வான்படையினர் தீரமுடன் போரிட்டிருந்தாலும் போரின் ஆரம்ப நாளில் (1941 ஜூன் 22)எதிரியிடம் இழந்துபோன வானாதிக்கத்தை சோவியத் விமானிகள் மீண்டும் ''கூர்ஸ்க்'' சமரின் போதுதான் (1943 ஜூலை5) கைப்பற்றினார்கள். அன்று சோவியத வான்படையினர் வீரம்செறிந்த போர் ஒன்றை நடாத்தினார்கள். ஒவ்வொரு விமானியும் உயிரை மதியாது தீரத்துடன் போரிட்டான்.

இப்போரில் தான், வான் சண்டை ஒன்றில் 9 எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்

திய அற்புதமான சம்பவம் நடந்தது. லெப்டினன்ட் கரவேடஸ் என்ற இந்த சோவியத் விமானியை அத் தேசம் முழுவதும் பாராட்டியது. இதில் தான், இரண்டு கால்களையும் இழந்த 'மரேஸ்யோவ்'' எனும் சோவியத் விமானி மூன்று எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்தினார். அன்றைய தினம் வானாதிக்கத்தை கைப்பற்றிய சோவியத் விமானிகள் அதன் பின்பு போரின் இறுதி நாள் வரை அவ்வாதிககத்தை செலுத்தினர்.

இறுதியில். பெர்லினுக்கான சமரில வியக்கத்தக்களவு தீரத்துடன் சோவியத் விமானிகள் செயற்பட்டார்கள் 14 நாட்களில் 1, 282 வான் சண்டைகளை நடாத்தி 1, 116 எதிரி விமானங்களைஅவர்கள் சுட்டு வீழ்த்தினார்கள்.

இரண்டாம் உலகயுத்தத்துக்கு பிற்பட்ட காலத்திலும் பல்வேறு நாட்டு விமானப் படையினரால் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன தான். ஆனால், இதற்குள் சாதனைகளை வரையறுப்பது கடினமாகவே இருக்கிறது.

அமெரிக்க வான்படையினர் வியட்நாமில் பல்வேறு சாதனைகளை செய்ததாக கூறினாலும் கிராமங்களையும், குடிமக்களையும் அழித்ததை தவிர வேறொன்றும் பெரிதாக செய்ததாக தகவல்கள் இல்லை அப்படியே செய்திருந்தாலும் அங்கு ஏற்பட்ட ஒட்டு மொத்தமானதோல்வி,

உலங்கு வானூர்திகளை கடலில் தள்ளிவிட்டு ஓடிவந்ததில் தான் நிற்கிறது. ஆப்கானில் சோவியத் வான்படையினரும் இதனைதான் செய்ததாக தகவல்கள் சொல்கின்றன.

லிபியா, கிரனடா, பனாமா மீதான அமெரிக்க நடவடிக்கைகள் சமவலுவற்ற தேசங்களுடனானபோர் என்றமுறையில் கருத்திலெடுக்கப்படமுடியாதவை. ஈராக்குடனான அமெரிக்கப் போர் மேற்குலக தொழில் நுட்பங்களை ஒன்று திரட்டிய பெரும் தொழில் நுட்ப இராணுவ நடவடிக்கை என்றபடியால் அதனையும் கருத்திலெடுக்காமல் விடுவோம்.

இவற்றை எல்லாம் விட்டுப் பார்க்கும் பொழுது இஸ்ரேலிய வான்படைச் சாதனைகள் மெச்சத் தக்கவை. கடல் மட்டத்துடன் பறந்து எதிரி பிரதேசங்களுக்குள் ஊடுருவி இலக்குகளை பலமுறை தாக்கி அழித்ததில் இஸ்ரேலிய வான்படை வெற்றி கண்டுள்ளது. சிரியாவுடனான போரின் முதன் நாளிலே சிரிய வான்படை நடவடிக்கையை முறியடித்து போரின் வெற்றிக்கு இஸ்ரேலிய வான்படை வழிகோலியது.

இவர்களது ''எண்டபே'' விமான நிலைய தாக்குதல் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. இந்திய வான்படையினர்கூட 1971-ம் ஆண்டுபாகிஸ்தானுடனானபோரில் பல சாதனைகளை புரிந்ததாக தன்னளவில் கூறப்படுகிறது. மிக இக்கட்டான சந்தர்ப்பங்களில் எல்லாம் திறமையாக செயற்பட்டதாக விமானப் படையினர் பாராட்டப்பட்டார்கள்.

இந்திய வான்படையினரின் அண்மைக்கால சாதனையாக 1989 இல் தமிழீழத்தில் நடந்ததொரு சம்பவம் சொல்லப்படுகிறது அதாவது துப்பாக்கி ரவைகளால் சேதப்பட்ட எம். ஐ. 8 உலங்கு வானூர்தி ஒன்று பறக்கமுடியாமல் நின்றது. ஆனால் அதன் இஞ்சின் இயங்கியது. அந்த வானூர்தியை வேறு வானூர்தி ஒன்றால் தூக்கிச் சென்றதை அல்லது கட்டி இழுத்துச் சென்றதை (ஆவடி வான்படைத் தளத்திற்கு) பெரும் சாதனையாக இந்திய வான்படையினர் வரையறுக்கின்றனர்.

இந் நாடுகளுடன் ஒப்பிடும் போது சிறிலங்கா வான்படையின் 42 வருட வளர்ச்சி மிகவும் பரிதாபத்துக்குரியதொன்றாகவே இருக்கிறது சாதனை என்று கூறும் பொழுது குடிமக்களை கொன்றதை தவிர வேறெதுவுமில்லை.

தமிழீழ விடுதலைப்போராட்டம் முனைப்புப்பெற்ற காலந்தொட்டு சிறிலங்கா வான்படையின் பங்களிப்பு போரில் இருக்கவே செய்தது முகாம்களுக்குள் படையினர் முடக்கப்பட்டதும் வானூர்திகளின் தேவைகள் அதிகமானது.

சிறிலங்கா வான்படையினரும் சில சாதனைகளை செய்ய முயன்றனர். ஆனால் அவையெல்லாம் பரிதாபகரமான தோல்வியிலேயே முடிந்தன. 1985 டிசம்பரில், சுதுமலையிலும், அரியாலையிலும் உலங்குவானூர்திகளின் உதவியுடன் இறங்கிய படையினர் தோல்வியுடன் திரும்பியதை இதற்கு உதாரணமாக சொல்லலாம்.

போட்டியற்ற வான்பரப்பில் மிதக்கும் போர்விமானங்கள், பதியும் பொழுது எப்பொழுதும் அச்சத்துடனேயே பதிந்தார்கள்பதியும ஒவ்வொருதடவையும்ஏதாவதொரு தோட்டா தம்மை இலக்கு வைக்கிறது என்றஉள்ளுணர்வு சிறிலங்காவின் விமானிகளுக்கு எப்போதுமே உள்ளது.

அதனால் தான் பெரும் நம்பிக்கையோடு எதிர்பார்க்

(9ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவை அதிர வைத்த இஸ்லாமிய குண்டு

சென்ற மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை; உலக முஸ்லிம் மக்கள் நிச்சயம் தொழுகைக்கு போக வேண்டிய முக்கியநாள். நாடுகடத்தப்பட்ட நிலையில் 400பலஸ்தினியரும் குரானை விரித்த வண்ணம் வெட்ட வெளியில் வானைப் பார்த்த வண்ணம் நின்றிருந்த நாள். குவைத்திலிருந்து இராக்கியப்படைகள் வெளியேற்றப்பட்டு இரண்டு வருடம் பூர்த்தியாகும் நாளாகவும் அது இருந்தது. அன்றுதான் நியூயோர்க நகரமக்கள் தம் வாழ்நாளில் என்றுமே கேட்டிராத இடியோசை போன்ற பேரொலியைக் கேட்டனர். உலகின் எங்கெங்கோ நடப்பதாக தொலைக்காட்சியில் பார்த்த பாரிய குண்டு வெடிப்பு நிகழ்வொன்றை அன்று அவர்கள் தம் மண்ணிலே கண் முன்பே கண்டு அதிர்ந்தனர், விண்ணை முட்டும் உலகின் இரண்டாவது பெரிய கட்டடம். 110 மாடிகள், 7 கட்டடத் தொகுதிகள், இரட்டை கோபுரங்கள் 50,000 பேர் பணிபுரியும் பல நூற்றுக்கணக்கான வர்த்தக தாபனங்களைக் கொண்ட உலக வர்த்தக மையம். அதன் அடிப்பாகத்தில் வானொன்றில் மறைத்து வைக்கப்பட்ட பாரிய குண்டு வெடித்ததில் 100 அடிக்கு மேலான அகலம் கொண்ட பெரும் துவாரம் ஏற்பட்டது. அதிலிருந்த ஐவர் உடன் மரணம்; முழுக்கட்டிடத்தின் தீயணைக்கும் பொறிகள் தொடர்புச் சாதனங்கள் யாவும் செயலிழந்தன; மாடிகளில் மக்கள் அலை மோதினர்; 1000க்குமேலே காயப்பட்டவர் தொகை; உலங்கு வானூர்திகளே இறுதியில் மக்களைக் காப்பாற்றின. பாரிய சிரமத்தின் மத்தியிலும் பெருத்த அவலத்தின் இடையிலும் இம் மீட்புப் பணி நடந்தது இப்போதைக்கு கட்டடத் தொகுதி பாவனைக்கு பயன்படாது போயுள்ளது. இதனால் ஏற்பட்ட முதல்வார நட்டமே 700 மிலியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்பானது அமெரிக்காவை ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளி விட்டது உலகின் பாதுகாப்பை உறுதி செய்ய கிளம்பிய அமெரிக்கா தனது உள் நாட்டில் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியவில்லை அமெரிக்க மண்ணில் என்றுமே நடந்திராத மோசமான நிகழ்வு இது. என்கிறார் நகர மேயர். நடக்கக் கூடாதது நடந்து விட்டது. குற்றவாளிகளை கண்டு பிடிப்போம் தண்டிப்போம் என பில்கிளிங்டன் சூளுரைக்கிறார். ஏனெனில் இக்குண்டு வெடிப்பை தொடர்ந்துபல அனாமதேய தொலைபேசி அழைப்புக்களால் உள்ளூர் பயணவிடுதிகள், சுப்பர் மார்க்கட்டுகள், விமானநிலையங்கள் போன்றவை சடுதியாக மூடப்பட்டும் தொல்லை ஒருபுறம் அமெரிக்கரை வாட்டுகின்றது. அமெரிக்காவை பற்றிய மாயைகள் பலஇன்று மறைந்து வருகின்றன. அமெரிக்க மக்களின்பத்திலொருவர் உணவு முத்திரையில் வாழ்வதும் காட்போட், தகரங்கள், பலகைகள் கொண்டமைந்த சேரிப்புறங்களை (அமெரிக்கப் பாணி) நியுயோர்க் நகரத்திலே காண முடியும் என்பதும் அமெரிக்கரின் வாழ்க்கை தரம் பற்றிய மாயைகளை உடைத்தது போல் இப்போது நடந்த பாரிய குண்டு வெடிப்பு அமெரிக்கபாதுகாப்பு அமைப்பின் பலவீனங்களையும்வெளிப்படுத்தி விட்டது.

முன்பு பனிப்போர் நிலவிய போது மூன்றம் உலக நாடுகளில் முனைப்பாக விடுதலை போராட்டங்கள்நடந்தபோது இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்திருக்குமானால் நிச்சயமாகபழி கே.ஜி.பிமேலோ அல்லது லிபிய ஆதரவு பெற்ற அபுநிதாஸ் குழு மேலோ விழுந்திருக்கும் அல்லது முதலாளிய பொருளாதாரத்தின்முதுகெலும்பை உடைக்க வேண்டும் எனமிகத் தீவிர நடவடிக்கைகளில் அக்காலகட்டத்தில் ஈடுபட்ட செருமனிநாட்டுபாடர்மெயின் கோவ் இயக்கம் மேலோ அல்லது இத்தாலியில் இயங்கிய செம்படை Redarmy) மீதோ சந்தேகம் எழுந்திருக்கும் ஆனால் காலவோட்டத்தில் இவையெல்லாம் கரைந்துவிட்டன. உலகில் பலமாகவிருந்த ஓர் அணியின் மூனை மழுங்கிய போதே இவர்களும் மழுங்கி விட்டனர். ஆனால் இன்று நடந்த குண்டு வெடிப்பின் பின்னணி மிக முக்கியமானது. உலகில் ஒரு புதிய அணியின் மூனை கூர்மையடைந்து வருவதை இந்நிகழ்வு தொட்டுக் காட்டுகின்றது. குண்டு வெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் அடிச்சட்ட இலக்கம் புலனாய்வோரின் கைகளில் சிக்கியதை அறியாதமுகமட்சலாமே என்கிற பாலஸ்தினியன் (26)தான் வானுக்கு கட்டிய வாடகை முற்பணத்தை பெறச் சென்ற போது அகப்பட்டதைத் தொடர்ந்து குண்டு வெடிப்பு பின்னணி துலக்கமாகிவிட்டது தொடர்ந்து கைதானவர்கள் யோர்தான் எகிப்தைச்சேர்ந்த அரபுக்களும் பாலஸ்தினியரும் ஆவார். இவர்கள் யாவருக்கும் மையமாகவிருந்த நியுஜேர்சியில் உள்ள மசூதி பற்றியும் அதனோடு தொடர்புடைய சேத் ஒமார் அப்துல் ரகுமான் எனபபடும் எகிப்திய முஸ்லிம் பழமைபேண் அமைப்பான இஸ்லாமிய குழுவின் ஆன்மீக தலைவர் பற்றியும் செய்திகள் இப்போது வெளிவரத் தொடங்கி விட்டன. அதுமட்டுமல்லாமல் அமெரிக்க மண்ணில் இஸ்லாமிய தீவிரவாத அமைபபுக்கள் நன்கு ஊடுருவியிருப்பதும் இப்போது தெளிவாகி விட்டது. எனவே இப்போது குண்டு வெடிப்பு தோடர்பாக கமாஸ்' இஸ்லாமிய ஜிகாத் "அல்கமாய் அல் இஸ்லாமியா" எனப் படும் இஸ்லாமிய குழு ஆகிய அமைப்புக்கள் பெயர்களே அடிபடுகின்றன. முதலிரண்டும் இசுரவேலால் ஆக்கிரமிக்கப் பட்ட பாலஸ்தினிய மண்ணில் போரிடுபவை. மூன்றாவது அமைப்புஎகிப்தைச்சேர்ந்தது.

எனவே இன்று இதன் உணர்வலைகள் ஈரான், எகிப்து, யோர்தான், அல்ஜீரியா எனப் பல நாடுகளில் எதிரொலிக்கின்றன எகிப்தில் இயங்கும் இஸ்லாமிய குழு இன்று பலமாக வேரூன்றி வருகின்றது. எகிப்தில் இயங்கும் அமெரிக்க சார்பானஅரசை தூக்கியெறிந்து முழுமையான இஸ்லாமிய மத அடிப்படையிலான அரசை அமைப்பது இவர்கள் நோக்கம் முன்னர் 1970 களில் அரபுலகை கைவிட்டு அமெரிக்க வோடு கைகோர்த்த எகிப்தியபிரதமரான அன்வர் சதாத் இஸ்ரவேலோடு காம்ப் டேவிட் ஒப்பந்தம் செய்தார். அவரைத் தீர்த்துக் கட்டியதன் மூலமே இஸ்லாமிய குழு தனதுசெயற்பாடுகளைபகிரங்கமாக்கியது. இன்று எகிப்தில் உல்லாசப் பயணிகளாக வரும்வெளிநாட்டவர் மேல் தாக்குதல்களை நடாத்தும் இவர்கள் அமெரிக்காவில் குண்டுவெடிப்புநடந்த சில மணி நேரத்தில் கெய்ரோவில் ஓர் உணவு விடுதியில் குண்டொன்றை வெடிக்கச் செய்து நால்வரை கொன்றது குறிப்பிடத்தக்கது அதுபோலவே ஜோர்தானிலும் முஸ்லிம் சகோதரத்துவம் பலம் பெற்று வருகின்றது. அல்ஜீரியாவிலேஇவர்கள்பலம் அதிகரித்த வேகம்மேற்குலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. பொதுத் தேர்தலொன்றில் வெற்றி பெற்று அரசை அமைக்கும் அளவிற்கு வெற்றி பெறும் நிலையிலிருந்த இவர்களை இன்று சட்ட விரோத அமைப்பாக்கி அல்ஜிரிய அரசு இவர்கள் மீது போர் தொடுத்துள்ளது. இவ்வாறே துருக்கியிலும் பழமை வாதம் தலை காட்டுகின்றது இவை தொடர்கதை.எல்லாவற்றின் பின்னணியில் ஈரான் இருப்பது பகிரங்க இரகசியம். முன்னர் சோவியத் எவ்வாறு புரட்சி ஏற்றுமதி வேலைகளில் ஈடுபட்டதோ. அதே போல் இன்று ஈரான் இஸ்லாமிய பழமைவாதக் கோட்பாட்டை உலகெங்கும் விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. இதனைக கண்டு அரபு நாடுகள் மட்டுமல்ல மேற்குலகே அஞ்சுகின்றது இன்றைய உலகின முதல் எதிரி ஈரானே என அமெரிக்காவின் புதிய நிருவாகம் குற்றப்பத்திரிகை வாசித்துள்ளது ஈரான் என்ன செய்கிறது? போர் விமானங்களை, நீர்மூழ்கிக் கப்பல்களை, டாங்கிகளை, ஏவுகணை களைவாங்கிக் குவிக்கின்றது. சோவியத்தின் சீர்குலைவைப் பயன்படுத்தி அணுவாயுத வல்லுநர்களை பெரும் ஊதியத்தில் வேலைக்கமர்த்தியுள்ளது. இன்னும் 8-10 வருடங்களுக்குள் ஈரான் அணுவாயுதங்களைக் கொண்டிருக்கும் என சி ஐ.ஏ அறுகின்றது. ஈராக் விடயத்தில் கவனமின்றி இருந்து மூக்குடைபட்டது போல் ஈரான் விடயத்தில் இருக்க சி.ஐ.ஏ விரும்பவில்லை போல் தெரிகின்றது.

எனவே இப்போது புதிய அணியின்தோற்றம்புலப்படத் தொடங்கி விட்டது. இதில் ஈரான் மாத்திரம நாயகன் அல்ல. பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் புதிதாக தோன்றியுள்ள முன்னாள் சோவியத்தின் மத்திய ஆசியக்குடியரசுகள்எனசங்கிலித தொடர் நீள்கின்றது. சோவியத்தின் வீழ்ச்சியோடு எழுச்சி பெற்ற மத்திய ஆசிய குடியரசுகள் ஆறு இன்று உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளன. கசக்கித்தான். அசர்பைஜான் துர்க்மேனித்தான், உசுபெக்கித்தான், தஜிகித்தான். கிரக்கித்தான் என்பனவே அவை. பெருத்த எண்ணெய் வளம், இயற்கைவாயு, கனிய வளம் தாராளமாக உள்ள பகுதி. குறிப்பாக கசக்கித்தாவில் புகழ்பெற்ற பெய்க்கனூர் விண்வெளி ஆய்வுமையம் அணுவாயுத பரிசோதன தளங்கள் மட்டுமன்றி பெரும் தொகை அணுவாயுதங்களும் இங்கு குவிக்கப்பட்டுள்ளன. தஜிகித்தானில் இப்போது நடக்கும் பெரும் உள்நாட்டுப் போரில் ஈரானும், பாகிஸ்தானும் தலையிட்டிருப்பது ரஷ்யாவிற்கு பெருத்த கவலையைக் கொடுத்துள்ளது. (முன்னாள் கொம்யூனிஸ்ட் கட்சிகட்கு எதிராக இங்கு சனநாயகவாதிகள் இஸ்லாமிய பழமைவாதிகளும் இணைந்து போராடுகின்றனர்) அது போலவே அசர்பைஜானுக்கும்ஆர்மீனியாவிற்கும் நாகர்னோ-கரபாக் பகுதி பற்றிய மோதலில் துருக்கி அசர்பைஜானுக்கு ஆதரவாக விருப்பதும்குறிப்பிடத்தக்கது.

கடந்த மாசிமாதம் பாகிஸ்தானிய நகரொன்றில் இவையெல்லாம் ஒன்று கூடினர். பொருளாதார அமைப்பின் அங்கத்தவர்களாக இவை இணைந்துள்ளன. பொருளாதார ஒத்துழைப்பு தாபனம் என்பது இதன் பெயர். 1965இல் இதன் அங்கத்தவர் ஈரான் துருக்கி. பாகிஸ்தான் மட்டுமே இன்று இவையோடு ஆப்கானிஸ்தான் ஆறு மத்திய ஆசியக் குடியரசுகளும் இணைந்துள்ளன. 30 கோடி மக்களைக் கொண்ட இவைதமக்கிடையே ஒருமுழுமையானபொருளாதார சமூகத்தைஇஸ்லாமிய அடிப்படையில் கட்ட முடிவெடுத்தன. பாகிஸ்தான் இதனைக்கட்டிக் காப்பதில்முன்னணியில் இருக்கின்றது. எல்லா அரபுநாடுகளின் செல்லப்பிள்ளையான பாகிஸ்தான் இன்றுநிலத்தால் சூழப்பட்ட தனது சகோதர நாடுகட்கு அரபுக் கடலோடு தொடர்புகொள்ள தக்கவகையில் பெரும்விதியமைப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இவை யாவற்றிற்கும் ஆப்கானிஸ்தானே மையம்.உயிர் நாடி. ஏனென்றால் இதற்கூடாகவே சகலதொடர்புகளையும் புதிய இஸ்லாமிய உலகம்ஏற்படுத்த முடியும் அவவாறானகேந்திர அமையத்தில் ஆப்கான் உள்ளதுஇதனால்தான்ஆப்கானில் அமைதி தோன்ற முழு இசுலாமிய நாடுகளும் முழு மூச்சாக முயன்றன இன்றுஆப்கானின் பேரால்குழுக்கள் (இவைஅனேகமாகவே யாவும் பழமைவாத கோட்பாடுகளை பின்பற்றுபவை) ஒரு உடன்பாட்டிற்கு வரவும் அதனைஉத்தரவாதப் படுத்தவும் ஈரான், பாகிஸ் மட்டுமல்ல சவுதியும்முன்வந்து கைச்சாத்திட்டன. இப்போது ஏற்பட்ட உடன்பாட்டை மீறுவோர் "வரலாற்றால் தண்டிக்கப்படுவர்" என நவாப் செரிப் கூறியதன் அர்த்தம் மிகத்தெளிவானது இறுதியாககிடைத்ததகவல்களின்படி ஆப்கான்தீவிரவாதகிஸ்புல்லா குழுத்தலைவர் கெத்மாட்டியரும், நவா செரிப்பும் ஈரானிய சனாதிபதியை சந்தித்து பேசியதன் பின் இனிமேல் கெத்மாட்பியர் அடக்கிவாதிப்பார் என நம்பப்படுகின்றது. இப்போது சி.ஐ.ஏகூறுவதைகவனியுங்கள் "இனி மேல் உலகின் கவனத்தை ஈர்க்கப் போகும் மோதல் களமாக இருக்கப் போவது மத்திய ஆசிய பகுதி மையமே"

முழுமையாக இவற்றினை பார்க்கும்போது வரலாற்றின் மாபெரும் விந்தை விளக்கமாகின்றது. பனிப்போர் முடிவடைய உலகம் தனி அமெரிக்க வல்லரசின் கீழ்ப்பட்ட ஒரு முனை உலகமாகி விட்டது அமைதிப் பூங்காவாக பவி மாறப்போகின்றது என்கிற எண்ணங்களுக்குமாறான ஒரு புதிய முரண்பாட்டுக்களம் தோன்றுகிறது. உலகவரலாற்றினை நகர்த்தும் பாரிய சக்கரத்தின் பல்ஒரிடத்திலேதேய்ந்தாலும் வேறோரிடத்திலேகூர்மை பெறுகின்றது.

இந்தப்பின்னணியில் தான் கடந்த மார்ச் 12ம் திகதி வெள்ளிக்கிழமையன்று பம்பாய் நகரை அதிர வைத்த பாரிய குண்டுவெடிப்புக்களின் தொடர்பைபார்க்க வேண்டும்.

இப்போது இக்கட்ரையின் தலைப்பு இந்தியாவிற்கும் பொருத்தமாகிறது. அமெரிக்காவில் மட்டுமல்ல இந்தியாவிலும்இஸ்லாமியகுண்டு வெடிப்புக்கள் என நாம் மாற்றிக் கொள்ளலாம்,

பாலகுமாரன்




மாணவர்களின் ஆக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு ஈழநாதம் விரும்புகிறது. வெள்ளி மஞ்சரியில் தொடர்ந்து மாணவர்களுக்கான பகுதி வெளிவரவுள்ளது. மாணவர்களிடமிருந்து கவிதை, கதை போன்ற சுய ஆக்க முயற்சிகளையும் சமூக மற்றும் அறிவியல் கட்டுரைகளையும் எதிர்பார்க்கிறோம். ஆக்கங்கள் இருநூற்றி ஐம்பது சொற்களுக்கு மேற்படாமல் இருப்பது விரும்பத்தக்கது.

(ஆ-ர்)

சிறுகதை

# நிதர்சனங்கள்

சோளகம் தென்றலாய் வந்து ஓங்கி நின்ற பனைமரங்களைத் தழுவியபடி வீசிக் கொண்டிருந்தது. இரவுஓயாது அழுதபடியிருந்த வானமும். இடைவிடாது அதிர்ந்து கொண்டிருந்த ஷெல் சத்தங்களும் இப்போது ஓய்ந்திருந்தன. வேகமாய்ப் போக வேண்டுமென காலை எட்டி வைத்துக்கொண்டிருந்தமாணிக்கவாத்தியாருக்கு, அந்த செம்பாட்டு மண் வாசனை இனம்புரியாத குதூகலத்தைக் கொடுத்திருக்கவேண்டும்போல இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினார். வயது போயிருந்தாலும் தளராத உடலும், உறுதியான மனமும் கொண்டவரென ஊராரால் பரவலாகப் பேசப்படுபவர். ''வீட்ட கெதியாய்ப் போனால்த்தான் சமாளிக்கலாம். நாறல் கீறலாய் மீனைக் கொண்டு போனால் பிறகு கனகத்திற்ற தப்பேலாது'' வாய்க்குள் முணுமுணுத்தபடி மண் ஒழுங்கைக்குள் இறங்கினார்.

''என்ன வாத்தியார், கன நாளுக்குப்பிறகு வெளிநாட்டுக் கடிதங்கள் இண்டைக்கு வந்திருக்குப்போல கிடக்கு, உங்களுக்கென்ன மாறிமாறிப் பிள்ளையளிட கடிதங்கள் வாசிக்கிறதிலியே நேரம் சரியாப் போயிடும்'' பால்க்கார சண்முகம் சொன்னதற்கு, ஒப்புக்காக தலையை ஆட்டிச் சிரித்தபடியே மாணிக்கத்தார் வீட்டுப்படலையைத் தள்ளிக் கொண்டு போகவும். மனைவி கனம் கையிலேகடிதங்களுடன் முன்நிற்கவும் சரியயிருந்தது. ''என்னப்பா, வெளிநாட்டில இருக்கிற எங்கட ஆக்கள இஞ்ச அனுப்பப் போறாங்களாம். உம்மட பிள்ளையள் என்னவாம்?'' வாத்தியார் பகிடியாகக் கேட்டது கனகத்தின் கோபத்தைக் கிளறியது. ''நாங்கள் படுகிற பாட்டில பிள்ளையளையும் இஞ்ச வைச்சிருந்து பாடுபடுத்துகிறதே'' கத்திய கனகத்தைப் பார்க்க வாத்தியாருக்கு வேதனையாக இருந்தது. தான் இந்த நிலையில் வளர்வதற்கு ஆதாரமான இந்த மண்ணுக்காக தன்னால் ஒன்றும் செய்ய இயலாது போனதையிட்டு... தாங்கமுடியாத குற்ற உணர்வொன்று நெஞ்சைஉறுத்தவே விறாந்தையிலருந்த கதிரையில் பாய்ந்தார்.

'உன்ர பிள்ளையள் வெளிநாட்டில சொகுசா நித்திரை கொள்ள, ஊராற்ர பிள்ளையள் நித்திரையில்லாமல் எல்லைகளில காவல் நிக்குதுகள்' மனச்சாட்சி எழுந்து முன்னின்று சொல்லுவது போலிருந்தது. ''அவங்களும் எத்தின தரம் எழுதியிட்டாங்கள். இந்த மனிசன் கேட்டாத்தானே: மண், மண் எண்டு சாகிது போதாக்குறைக்கு என்னையும் '' மனைவி கனகத்தின் புறுபுறுப்பு தொடர்ந்தபடியிருந்தது இப்போது ஆறுமாதங்களாக அவங்களிடையே தினமும் நடக்கும் இந்தவாக்குவாதம். ''இஞ்ச பாருங்கோ மூத்தவன் எழுதியிருக்கிறதை. அன்புள்ள ஐயா, இங்க என்னைக் காணுறஎங்கட ஊராக்கள் எல்லாம் ஒருமாதிரிக் கேட்கினம்.

''நீங்கள் எல்லாரும் வெளிநாட்டில இருந்து கொண்டு வாத்தியாரையும், மனிசியையும் அங்கயே விட்டிருக்கிறியள் எண்டு; உந்த மோசமான இடத்திலயிருந்து கஷ்டப்பட உங்களுக்கு என்ன குறை. அம்மாவுக்கும் வர விருப்பமாம். நீங்க தான் மாட்டோன் எண்டு நிக்கிறீங்கள் உடனஎப்ப கொழும்புக்கு வாறீங்கள் எண்டு எழுதுங்கோ'' கனகம் வாசிப்பதை நிறுத்திவிட்டு ஓரக்கண்களால் கணவனைப் பார்த்தாள். எதுவுமே நடக்காதது போல வாத்தியார் கதிரையிலே சாய்ந்தபடி முற்றத்திலே நின்ற இரட்டைப்பனைகளையே வைத்த கண் வாங்காது பார்த்தபடியிருந்தார். ''என்னப்பா'' கனகம் உரக்க சொல்லவும், ''இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறீர். நான் எப்பையும் சொல்லுறதைத் தான் இப்பவும் சொல்லுறன், நான் இந்த மண்ணை விட்டு வரமாட்டன் உமக்கு விருப்பமெண்டா தாராளமாப் போய் பிள்ளையளோட சந்தோஷமாய் இருக்கலாம். நிம்மதியா என்ர கடைசி மூச்சும் இந்த மண்ணில தான் போக வேணும்'' அமைதியாக ஆனால் தெளிவாகச் சொன்னார் மாணிக்கத்தார். ''ஓம் என்ர பிள்ளையோட கடைசி காலத்தில்கூடசந்தோசமாயிருக்க இந்த...'' வார்த்தைகள் முடியாமல், விம்மலாக ஆரம்பித்து அழுகையாக வெடித்தது கனகத்தின் குரல். இப்படியே வழக்கத்துக்கு மாறாக அவர்கள் இருவரின வாக்குவாதங்களும் நாட்களாக மாதங்களாக நீண்டு இறுதியில் கனகுதான் வெற்றியடைந்தாள்.

வெற்றி எதிரொலியாக எல்லாக் காரியங்களும் சீக்கிரமாய் முடிக்கப்பட்டு இன்று அவர்கள் இந்த மண்ணை விட்டுப் போக வேண்டிய நாளாகவும் குறிக்கப்பட்டது. கனகு ஓடி ஓடி எல்லா வேலைகளையும் பார்த்தபடியிருந்தாள். வழியனுப்பவென வந்திருந்த உறவினர்கள். அயலவர்கள் எவரையுமே மாணிக்கவாத்தியார் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. வழமையாக விறாந்தையில் தான் அமரும் அந்தக் கதிரையிலே சாய்ந்தபடி முற்றத்தில் நின்ற இரட்டைப் பனைகளையும், தூரத்திலே பச்சைக் கம்பளமாய்த் தெரிந்த வயல்வெளிகளையும் அதற்கப்பால் தெரிந்த பனை வடலிகளையும் ஏக்கத்தோடு பார்த்தபடியிருந்தார்.

## ஜொவித்தா யேசுதாசன்

நினைவுகள் ஐம்பது வருடங்களின முன் ஓடிச்சென்றன. அப்போது அவருக்குப் பத்து வயது அது பனங்காய்க்காலம். வீட்டிலே யார் முதலில்விழும் பனங்காய்களை எடுப்பது என்று ஒவ்வொருவருக்குள்ளும் போட்டி. அன்றும் அப்படித்தான் இரவு எல்லோரும் அப்புவிடம் பாடம் கேட்டுப் படித்துக் கொண்டிருக்கும் போது அமைதியைக்கிழித்துக் கொண்டு, மாணிக்கத்தாரின் பொல்லாத காலத்துக்கு பனங்காய் விழும் சத்தம். மாணிக்கத்தார் பாடம் படிப்பதையும் மறந்துபனங்காய் எடுக்க ஓட அப்பு தடியுடன் துரத்திவர, தண்டனையாக அந்த இரட்டைப்பனைகளைச் சுற்றி இருபது தடவைகள் ஓடவேண்டியதாகப் போய்விட்டது சரசர சரசர என்றுகாய்ந்த பனை ஓலைகள் ஒன்றோடொன்று உரசும் சத்தம். மாணிக்கத்தாரின் நினைவுகளை நிகழ்வுக்கு மீட்டுக் கொண்டு வந்தது. அந்தசெம்பாட்டு மண்ணின் ஒவ்வொரு அணுவையும் அவர் தன்னை விட அதிகமாய் நேசித்தார். பழைய நினைவுகளை மீட்டிப் பார்ப்பதில் நெஞ்சில் பாறாங்கல்லாய்க் கனத்த சோகங்கள் குறைவது போலிருந்தது.

''என்ன வாத்தியார் பிள்ளையள்பேரப் பிள்ளையளைப் பார்க்கிறசந்தோசத்தில இருக்கிறியள் போல'' அவரோடு ஒன்றாக ஒரே பாடசாலையில் படிப்பித்த சிவஞானம்சொல்லிக்கொண்டு பக்கத்திலிருந்த கதிரையில் இருந்தார். பிள்ளைடள் பேரப்பிள்ளையளை விட நான் அதிகமாய் நேசிக்கிற ஒன்றை விட்டிட்டுப் போறதை நினைக்க''மாணிக்கத்தார் எங்கேயோ பார்த்தபடி சொன்னது சிவஞானத்துக்கு ஏதோ போல இருந்தது. ''இந்த மண்ணின்ர கஷ்டங்களிலேயே வளர்ந்து ஊறிப்போன நான் இனிச் சாகிற வயசில சொகுசுகளை விரும்பேல்ல. வெளிநாட்டில எங்கட ஆக்கள் வாழுற சின்னத்தனமான வாழ்க்கையை என்னால் வாழ முடியாது. என்ர கடைசி மூச்சும் இந்த மண்ணிட காத்தில கலக்கோணும் என்றுதான் ஆசைப்படுகிறன்'' சிவஞானத்துக்கு என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. அவனவன் எங்க தப்பியோடலாம் என்ற நினைவோட வாழ்ந்துகொண்டிருக்க இவர் போல மிகச் சிலர் இருக்கிறது சிவஞானத்துக்குள் மாணிக்கத்தார் மிக உயர்ந்து நின்றார்.


நேரம் ஆமையாய் நகர ''என்னப்பா ஏறுங்கோவன்'' மனைவி கனகத்திடமிருந்து உத்தரவு பிறந்தது மீண்டும் ஒரு தரம் அந்த இரட்டைப் பனைகள், வயல் வெளி, பனை வடலிகள் செம்பாட்டு மண் எல்லாவற்றையும் ஆசை தீர பார்த்துக்கொண்டார். இப்போது மனம் தெளிவாய் இருந்தது. அடி மனதில் ஆழமாய் நம்பிக்கை அரும்புகள் முளைவிட்டிருந்தன. பவுத்திரமாய் எடுத்து வைத்திருந்த அந்த விலை மதிப்பற்ற பொருளைமட்டும் ஒருதடவை தொட்டுப்பார்த்து திருப்தி கண்டவராய் ஓட்டோவில்ஏறினார்.

கண்மூடி விழிப்பதற்குள் நாட்கள் நகர்ந்து போய் அன்றோடுமாணிக்கத்தாரும்மனைவியும் அந்த அகதி நாட்டிற்கு வந்து இரண்டு மாதங்கள்ஆகிவிட்டன. நினைவுகளுடன் நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருந்த மாணிக்கத்தாருக்கு எதுவுமே திருப்தியைத் தரவில்லை. பேரப்பிள்ளைகளுக்கு தான் நேசிப்புக்குரிய தமிழீழ மண்ணை அந்தமண்ணின் அவலங்களை, தியாகங்களை, வெற்றி முரசுகளை எல்லாம் சொல்வது ஒன்றில் தான் அவருக்கு பரமதிருப்தி. ஆவலாய் அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போது அவர் நம்பிக்கை இன்னும் வலுப்பெறும்.

கட்டிலிலே படுத்திருந்த மாணிக்கத்தாருக்கு அருகில் கனகு அழுதபடியிருந்தாள். ''என்னத்துக்கு இப்ப அழுகுறீர்? இதையெல்லாம் எப்பவோ எதிர்பார்த்துத்தான் வந்தனான்'' குழந்தை போலஅழுத கனகத்தைத்தேற்றமாணிக்கத்தாரால் முடியவில்லை அவரைக் கட்டிலிலே விழுத்திய அந்த நிகழ்வுகனகத்தின் தவறைசுட்டிக்காட்டுவது போல மீண்டும் அவளுக்குப் படமாகத் தெரிந்தது. ''அம்மா தயவு செய்து சொல்கிறன். வெளியில போகேக்க வரரேக்க எல்லாருக்கும் முன்னால தமிழால கதைக்காதைங்கோ அய்யாவுக்கும் சொல்லுங்கோ தமிழன் எண்டா ஒருதரும் மதிக்கமாட்டாங்கள்'' மூத்த மகன் அதிகாரத் தொனியிலே கனகத்துக்குச் சொன்

(9ஆம் பக்கம் பார்க்க)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
31- 01- 1932

உதிர்வு:
19- 03- 1992

அமரர்
**கபிரியேல் பிரகாசம்**

(''பாரியகம்: சென்.ஜேம்ஸ் வீதி, வயாவிளான்)

''சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

காலம்ஒன்று போனாலும் எம் கண்ணீரும் ஓயவில்லை
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.
அந்த நினைவினிலே உங்கள் முகம் நிறைந்திருக்கும்

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று 19.03.1993 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் அத்திருப்பலியில் கலந்து கொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், அம்மா, சகோதரர்கள், சகோதரி, மைத்துனிமார், பெறாமக்கள், மைத்துனர், உறவினர்

த. பன்னீர்ச்செல்வம்
கிராமசேவையாளர்,
இராஜவீதி, கோப்பாய் வடக்கு (4492)



## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தியாகச்சுடர்

வீரஜனனம்
06 | 03 | 1972



வீரச்சாவு
19 | 03 | 1992

**லெப்.ஆதவன் [ஜேம்ஸன்]**
(சுப்பிரமணியம் பிரபாகரன்)


வீழ்ந்ததுவோர் வேங்கையிங்கே வெங்களத்தில் என்றுமிக
சூழ்ந்ததொரு துயர் கொண்டோம் ஆனாலும் - சூழ்ந்தபடை
தான் தொலைக்கத் துணிவுகொண்டு தானையிலே தானிணைந்து
வான்சுடராய் வாழ்கின்றான் வையம்.

மேற்கு முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு.

பிரிவால் துயர்கொண்ட
குடும்பத்தினர்.
நக்கீரன் ச. ச. நிலையத்தினர்,
அல்வாய் வடக்கு.

[4488]






(சி-6114)

# யாழ். மாவட்ட உணவு விநியோகம்; கப்பற்கூலி மக்களுக்கு மேலதிக சுமை

பொருளாதார தடைக்கு ஆளாகியிருக்கும் இந்த வேளையில் யாழ் குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும்அத்தியாவசிய உணவுப்பொருளான அரிசியின் விலை ஏற்றம் மற்றும் உணவுப் பற்றாக்குறை பற்றி பொறுப்புள்ள அதிகாரியான புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் செ. பத்மநாதன், யாழ் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் தீவகக்கோட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் ப.கனகலிங்கம் ஆகியோர் வழங்கிய பேட்டி இங்கே தரப்படுகிறது.

**பேட்டி: மதன்**

## செ. பத்மநாதன்

-புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர்.

ஃ கடந்த காலங்களில் உணவுப் பொருள்களின் விநியோகத்தை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமும், உணவுத் திணைக்களமும் பொறுப்பேற்று நடத்தின. இப்போது யாழ் குடாநாட்டில்உலர்உணவு விநியோகத்திற்கு பொறுப்பாக உள்ள அதிகாரியார்? அல்லது திணைக்களம் எது?

இப்போது யாழ். அரசாங்க செயலகமும், குறிப்பாக யாழ்ப்பாணம் செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு, கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் மூலம் பெறும் உணவுப் பொருள்களை விநியோகிக்கின்றது. அவசர கால சூழ்நிலை காரணமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் யாழ் குடா நாட்டுக்குப் பொருள்கள் அனுப்பப் படுவதால் அவருடைய பிரதிநிதியாக புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர், அரச அதிபரின் மேற்பார்வையில் தற்போது உணவு விநியோகச் செயற்பாட்டைச் செய்து வருகிறார்.

ஃ மக்களுடைய அவசர நுகர்ச்சிக்குத் தேவையான வகையில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கானஉணவைக் களஞ்சியப் படுத்தி வைப்பது வழக்கம். உணவை யாழ் புனர்வாழ்வுப் பிரிவு களஞ்சியப் படுத்தியிருந்தால் யாழ் குடா நாட்டில் உணவு நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம் என்பதை ஒப்புக் கொள்வீர்களா?

ஆம்; யாழ் மாவட்டத்தின் உணவுத்தேவையில் 5 வீதம் மாத்திரம் இம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மீதியானவற்றில் 10 வீத பொருள்கள் மாத்திரம் கடந்த காலங்களில் கொழும்பிலிருந்து எமக்குஅனுப்பப்பட்டுவந்தன. மீதத் தேவை கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னாரில் ஒரு பகுதியிலிருந்தும் பெறப்பட்டது. இம் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சிவப்பு நாட்டரிசி முழுவதும் யாழ் மாவட்டத்தினுடைய தேவைக்காக ப.நோ.கூ. சங்கங்களினாலும், தனியார் வர்த்தகர்கள், மில் உரிமையாளர்களாலும் கடந்த காலத்தில் இங்கு கொண்டு வரப்பட்டுக் களஞ்சியப்படுத்தி தேவையான சந்தர்ப்பங்களில் கேள்வி - நிரம்பல் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது. 1990 ஜூன் யுத்தத்துக்கு முந்திய காலகட்டத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் இம் மாவட்டத்துக்குத் தேவையான உணவு முழுவதும் அரசினால் கையாளப் படவுமில்லை; விநியோகிக்கப்படவுமில்லை. 1990 ஜூன் யுத்தத்துக்குப் பின்னர் தரைவழித் தொடர்பு அடைக்கப்பட்டதனால் யாழ் மாவட்ட உணவுத் தேவைக்கு முன்னர் கூறிய மாவட்டங்களிலிருந்து எவ்வித உணவும் பெறமுடியாத நிலை உருவாகியுள்ளது. இவ்வாறிருக்க, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் கொழும்பில் இருந்து அனுப்பும் உணவில் மாத்திரம் தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, முழுமையாகத் தேவைப்படும் அரிசியைக் களஞ்சியப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

ஃ நீங்கள் அண்மையில் அனுப்பிய தரவுகளுக்கு ஏற்பஅத்தியாவசியசேவைகள் ஆணையாளர் உணவுப் பொருள்களை யாழ். குடா நாட்டுக்கு அனுப்பியுள்ளார். இதனை ஏலவே செய்திருந்தால் உணவுப் பற்றாக்குறையைத் தவிர்த்திருக்கலாம் இல்லையா?

தற்போதைய நிலையிலும் பார்க்க முன்னையநிலை வேறுபட்டது. 1992 ஆகஸ்ட் வரை தரை வழிப்பாதையும் ஓரளவு செயற்பட்டது. ஆதலினால் கப்பலின் மூலம் நாம்எதிர்பார்த்த உத்தேச தேவை, மாதமொன்றுக்கு 10,000 மெற்றிக்தொன் உணவுத் தானியங்களாகும்.1992 ஆகஸ்ட் வரையும் ஒரு மாதத்துக்குத் தேவையான உணவுப்பொருள் களஞ்சியப்படுத்தப்பட்டு எம்மிடம் கையிருப்பில் இருந்தது. அப்போது நாம் எதிர்பார்த்தபடி 3 கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. வெளிச் சந்தையிலும்பொருள்கள் கணிசமான அளவு இருந்த காரணத்தால்,எமது களஞ்சியத்திலிருந்த பொருள்களை - அரிசியையும், மாவையும், ஹைலண்ட் பால் மாவையும் வெளிச் சந்தையில் விற்க முடியாத நிலை இருந்தது. எனவே, அக் காலத்தில் மேலதிகப் பொருள்களை அனுப்பும்படி கோர வேண்டிய அவசியமில்லை.

ஃ அப்படியானால் 1992 ஆகஸ்ட் வரையும் ஒருமாத காலத்துக்குத்தேவையான உணவு உங்களிடம் கையிருப்பில் இருந்தது. அதற்குப்பின் இன்றுவரையிலான சுமார் ஏழுமாத காலத்துக்கிடையில் குடா நாட்டு உணவுத்தேவை பற்றித் தரவு சமர்ப்பித்து கொழும்புடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டீர்களா?

ஆனையிறவு யுத்தமும் மற்றும் கொம்படிப் பாதையால் பொருள்கள் தடுக்கப்பட்டதோடு, ஆகஸ்ட் மாதம் வரை சேவையில் ஈடுபட்டிருந்த 3 கப்பல்கள் 2 ஆகக் குறைக்கப்பட்டன. அதேவேளை, எதிர்கால உணவுத்தேவையை முன்கூட்டியே எதிர்வு கூறக்கூடியதாக இருந்தது.எனவே உணவு விடயம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு எம்மாலும், அரச அதிபராலும் முன் வைக்கப்பட்டது. ஆனால், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களத்தில் உருவான நிதி நெருக்கடி காரணமாக கப்பல் சேவையை மேலும் குறைக்க நவம்பர் மாதத்தில் தீர்மானித்ததால் இதன் விளைவுகள் திரும்பவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

ஃ வாதுவக் கப்பலில் இருந்து இறக்கப்படும் பொருள்களுக்கும் முன்னைய கப்பல்களில் கொணர்ந்த பொருள்களுக்கும் இடையில்விலை வேறுபாடு ஏதாவது உள்ளதா?

நிதி நெருக்கடி காரணமாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்குப் பொருள்கள் அனுப்புவதைக் குறைக்க உத்தேசித்திருப்பதாக அறிவித்ததை அடுத்து, அதற்கு மாற்றீடாக நாம் ப. நோ. கூ. சங்கங்களிடமிருந்து முற்பணம் பெற்று அனுப்பி, உணவுப் பொருள்களைப் பெறுவதற்குக் கூறிய ஆலோசனைப்படி ப.நோ.கூ, சங்கங்கள் வெளிச்சந்தையில் விற்பனை செய்வதற்காக பொருள்கள்நவம்பர், டிசம்பர் மாதங்களில்அனுப்பப்பட்டன. நிவாரணப் பொருளுக்குக் கப்பற் கட்டணம் அறவிடப்படுவதில்லை. 1992 செப்ரெம்பர் வரையும் நிவாரணம் வழங்குவதற்கு அனுப்பப்பட்ட பொருள்களுக்கு நிவாரணம் வழங்கியது போக, மீதியானவை வெளிச்சந்தையில் கொழும்பு விலையிலேயே விற்கப்பட்டன. ஆனால் விற்பனைக்கு என்று பொருள்களைக் குறிப்பாகக் கேட்ட போது, கப்பற் கட்டணம் கட்ட வேண்டிய நிலை ப.நோ. கூ. சங்கங்களுக்கு ஏற்பட்டது

கொழும்பிலிருந்து ஒருமெற்றிக் தொன் [1000 கிலோ] பொருள் கொண்டு வருவதற்கு 2750 ரூபா/- பொருள்களை இறக்குவதற்கு200 ரூபா.பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவர 600 ரூபா. ஏற்றுமதிஇறக்குமதிக்கூலியாக 400 ரூபா செலவிட வேண்டியுள்ளது. மேற்படி செலவைக் கணித்துப்பார்த்தால் கிலோவுக்கு 4 ரூபா வரை மேலதிகச் செலவாகின்றது.

ஃ விலை வேறுபாடு எந்தக் காலம் வரை நீடிக்கும்?

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்விற்பனைக்கான பொருள்கள்பெறுவதற்குதந்த முழுத் தொகைக்கும் பொருள் விநியோகிக்கப்படும் வரை பழைய இந்த ஒழுங்கு இருக்கும்.

ஃ விநியோகத்தில்ப.நோ கூ. சங்கங்களுக்கும் வர்த்தகத்திணைக்களக்கிளைகளுக்கும் இடையில் பாகுபாடு காட்டப்படுவதாகச் சொல்லப்படுவது சரியா?

அவ்வாறு செய்யப்படுவதில்லை

## ப. கனகலிங்கம்

தீவகக் கோட்ட ஒன்றியத் தலைவர்.

ஃஅரிசிவிலைஏற்றம்மற்றும் விலைவேறுபாடு பற்றி தீவகக்கோட்ட ஒன்றியத்தலைவர் ப. கனகலிங்கம் கூறுகிறார்:

''உண்மையில் யாழ். குடா நாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது யாழ் அரசஅதிபரைச் சார்ந்தது.அவர்உணவுத்தேவையின் அவசியத்தை உணர்ந்து, அதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்பட்டிருக்க வேண்டும். யாழ்ப்பாண மக்களின் உணவுத் தேவையைச் சீரான முறையில் கணித்துத் திட்டமிட்டு விநியோகத்துக்கான உணவுப் பொருள்கள் பெறப்படவில்லை.''

ஃ யாழ். குடா நாட்டில் அண்மைக் காலங்களில் அரிசிவிலை அதிகமாக இருக்கக்காரணம் என்ன?

கடந்த சில காலமாகப்புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் உணவுவிநியோகப்பணியை ஆற்றிவருகிறார். புனர்வாழ்வு திணைக்களம் யாழ். குடா நாட்டு மக்களின் அரிசித் தேவையைக்குறிவைத்துத்திட்டம் எதுவும் சரியாகச் செய்யவில்லை. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வரும் பணியில் இந்தத் திணைக்களத்தின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது. யாழ் புனர்வாழ்வுத் திணைக்களப் பகுதியினர்சரியான முறையில் திட்டமிட்டுப்பொருள்களைக் கொண்டுவராததால் அரிசித் தட்டுப்பாடு மற்றும் பொதுவான உணவுப்பொருள் விலை ஏற்றப்போக்குக்குக் காரணமாகும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பணம் செலுத்திக் கப்பலில் உணவு கொண்டுவரும் திட்டம் ஒன்றை யாழ்செயலகம் உருவாக்கியதால் ஒருமுறை கப்பல்ஒன்றில் உணவுவகை ஏற்றிவர 82 லட்சம் ரூபாவுக்கு சற்று அதிகமாகப் பணம்செலுத்தவேண்டிய அவல நிலை. அத்துடன் சங்கங்கள் வியாபார ரீதியாக இயங்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன. வறுமை நிவாரண விலை என்றும் 'உ, அட்டை விலைஎன்றும் உணவு விலையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாவனையாளர் விலைச் சுமையைத் தாங்க வேண்டியுள்ளது. மேலும் உணவுத் திணைக்களம் கடந்த முப்பத்திரெண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளது. உணவுத் திணைக்களம் சரியான வகையில் இயங்கியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. கப்பல் கட்டணமாகப் பெருந் தொகையான பணம் கட்ட வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. இந்தத் திணைக்களம் மூடப்பட்டதால்தான்கப்பல் கட்டணம் என்றும், உணவு விலை அதிகரிப்பு என்றும் யாழ் குடாநாட்டு மக்கள் பெரிதும் கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள். இடம் பெயர்ந்தவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு கப்பல் கட்டணம் செலுத்தினால் தான் உணவு என்றால், மற்றவர்கள் பட்டினியால் சாவதா? இதைப் பொறுப்புள்ள அதிகாரிகள் உணர வேண்டும். இரண்டு மாதங்களுக்கு முன் திட்டமிடல் பணிப்பாளரால் சுற்று நிருபம் ஒன்று அனுப்பப்பட்டது. அதில் நிவாரணம் மாத்திரம் வழங்கப்படும்; மற்றவர்களுக்கு உணவுப்பொருள்கள் வழங்குவதற்கு பணம் தரவேண்டும் என்று பணிக்கப்பட்டிருந்தது. இப்போது சுழற்சி முறையில் கப்பல் வரும் மூன்று மாதத்துக்குத் தேவையானஉணவுவகைகளைக்களஞ்சியப்படுத்தப் போகிறோம என்றெல்லாம் பேசுகிறார்கள். இந்த நிலை வெகுஜனப் போராட்டம் மற்றும் மனித நேய அமைப்புக்களின் அழுத்தத்தால் ஏற்பட்டதா? அல்லது அரச அதிகாரிகளின் முயற்சியா என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும்.

## க. மாணிக்கவாசகர்

யாழ். அரச அதிபர்

ஃ உணவு விலைப் பிரச்சினைகள் பற்றி யாழ். அரச அதிபர் க. மாணிக்கவாசகரிடம் கேட்டபோது:

'வாதுவ' என்ற சரக்குக்கப்பல் 1900 மெற்றிக் தொன் மா, 1500 மெற்றிக் தொன் அரிசி, 300 மெற்றிக் தொன் சீனி மற்றும் பருப்பு போன்ற பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்துள்ளது. யாழ். புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் எனது சார்பில் கப்பலுக்குச் சென்று இந்தப் பொருள்களைப் பாரம் எடுத்துள்ளார். இந்தப்பொருள்கள் அத்தியாவசிய சேவை ஆணையாளரால் அரச அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதால் கப்பல் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. ஆகவே, பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரும் செலவுடன் சேர்த்து 'உ' அட்டைக்கு இம்முறை வழங்கப்படும் அரிசியின் விலை குறைக்கப்படவுள்ளது. அதாவது, 'உ' அட்டைக்கு ஒரு கிலோ ரூபா 21.50 விற்ற அரிசி, குறைந்த நியாயமான விலையில் பாவனையாளருக்கு ப. நோ. கூ, சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படும். புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளருடன் ஆலோசனை கலந்த பின் புதிய உத்தேச விலை அறிவிக்கப்படும் என்றார்.

பெரியபுலம் மகா வித்தியாலயம்

**கல்விக்கண்காட்சி**

பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் கல்விக்கண்காட்சி

கல்வி அலுவலர்கள், அதிபர்கள், ஆலோசகர்கள், பெற்றார்கள் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று (1993-03-20) சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது

நுழைவு :— மாணாக்கர் ரூபா 5/-
பெற்றார் ரூபா 10/-

(சி-6229) — அதிபர்

**பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு**

இம்மாவட்டத்தில் சனசமூக நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றால் நடாத்தப்படும் அனைத்துப் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களையும் 21-3-93 ஆம் திகதி ஞாயிறு காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறும் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
93-03-17

(சி-6227)

## மிருகக்காட்சிசாலை

கண்டி பள்ளேகலவில் மற்றுமொரு மிருகக்காட்சிசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. 50 ஏக்கரில் அமைக்கப்படவுள்ள இதன் நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது. முதல்கட்ட வேலைகளுக்கு 5 கோடி ரூபா செலவாகும் என தெரிவிக்கப்படுகின்றது ஏற்கனவே தெஹிவளை பகுதியில் மிருகக்காட்சிசாலை ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



### திரு. வெற்றிவேல் முருகேசு

(அந்தியேட்டி 19-03-1993 இன்று நடைபெறும்)

பெற்றுவளர்த்தீர் எம்மை
பெரியவர் ஆக்கி விட்டீர்
பாசமும் பண்பும் பாகாய்
கொடுத்தளித்தீர்.
பாசமெனும் கடலில் எமை
தத்தளிக்க விட்டுச்சென்றீர்.

''போஸ்மன் வீடு''
உடுவில்,
சுன்னாகம்.

உம்பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்திகள்.

[4484]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை காவேரி

[நிரஞ்சினி வைரமுத்து]

தாயகமண்ணில் 19-06-1972 — தமிழீழ விடிவுக்காய் 19-03-1991

அடிமை விலங்கொடிக்க தமிழர் தம் தன்னிகரில்லா
தலைவனின் ஆணைப்படி உன்வீரம் செறிந்த
வரலாற்றினைத் தமிழீழத்தில் பதித்து
பெற்றவரையும், பெருமையுறச் செய்தவளே!
யுகம் யுகம் சென்றாலும் உன் நினைவு
எம்மைவிட்டு அகலாது. உன்னோடு
சிலாவத்துறையில் எதிரியைச் சங்கரித்து
சங்கமமான மாவீரர்கள் அனைவருக்கும்
அஞ்சலிகள் உரித்தாகுக.

பொன்மணி நிலையம்,
காவேரி வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

தந்தை, தாய்,
சகோதரர்கள், உறவினர்கள்.

(4507)

---

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

கொழும்பு அல்லது வவுனியாவிலிருந்து ஆங்கில்மருந்துகள் கொண்டுவரும்சகல வழி வியாபாரிகளிடமிருந்து மருந்துகள் கொள்வனவு செய்யவேண்டாமென சகல அங்கத்தவர்கட்கும், மருந்து கொள்வனவு செய்யும் ஏனைய வர்த்தகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

முக்கிய குறிப்பு:-

வழி வியாபாரிகள் மருந்து கொண்டுவந்து விநியோகம் செய்வதாயின் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

கௌரவ செயலாளர்.

[4504]

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1992 - 93கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமைபெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தகமாணிபகுதி 1

பின்வரும் பாடங்களில்மாத்திரம்சிறப்புக்கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்).

விண்ணப்பப் படிவங்களும், உரிய விபரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெளிநிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 1993 மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்சிறாப்பரிடம் 50/-ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் பெற விரும்வோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை, தபாற்கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 ச.மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1991 -92 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
11-03-1993
(சி-6212)

---

## நூல் வெளியீடும்

[ஆனைமுகத்தோன் ஆதிமுதலானவன்]

## சமயக் கருத்தரங்கும்

21-3-93 ஞாயிறு பிற்பகல் 2. 30 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தலைமை:- பண்டிதர் க. சங்கரப்பிள்ளை
சிறப்புரை:- கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர்: இந்துநாகரிகத்துறை)

மேலும் பல அறிஞர்கள் கருத்துரை வழங்குவார்கள். அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
சாவகச்சேரி. நூலாசிரியர்- புன்னாலைக்கட்டுவன்

(4505)

## 45- ம் நாள் நினைவலைகள்



வீரப்பிறப்பு
25-10-1975

வீரச்சாவு
2-2-1993

### 2-ம் லெப் தங்கவேல், தாமு

முருகேசு தனபாலசிங்கம் (கணேஸ்)

அரும்பொன்று மலருதென்று ஆவலுடன் காத்திருந்தோம்
அந்த அரும்பு சுதந்திர காற்றை சுவாசிக்க விரும்பி
தளராத மனதுடன் தமிழீழம், தமிழீழம் என்று கூவி
தான் நினைத்த பாதையில் நடக்க விரும்பி களம் பல கண்டு
முடிவில் மாதகலில் மாவீரனுமாகி விட்டாயே
தாமு, நீ நினைத்ததை செய்து விட்டாய்
உனது இலட்சியம் நிறைவேறும்.
என்றும் உம்மை நினைந்துருகும்,


54, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

அத்துடன் மாதகலில் இவருடன் வீரச்சாவடைந்த மற்றைய மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

(19 3.93) இன்று வெள்ளிக்கிழமை 45 ஆவது நினைவு நாளில் சக போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். (4499)

## அந்தியேட்டி அழைப்பு



அமரர்

### கந்தவனம் சோதிலிங்கம்

[சோதியப்பா]

(முன்னாள் அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளரும் வல்வை நெடியகாட்டு திருச்சிற்றம்பலபிள்ளையார் தேவஸ்தான தர்மகர்த்தா சபை செயலாளரும்)

தோற்றம்:- 31- 05- 1934 — மறைவு:- 18- 02- 1993


எமது இல்லத்தில் (20. 3. 93) நாளை நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் வந்து கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

தெணி ஒழுங்கை,
நெடியகாடு.
V.V.T.

(4490)

# சித்திரவதைக்கெதிரான ஐ. நா. பிரகடனத்தில் சிறிலங்கா கைச்சாத்திடும்?




**கொ**ம்மியூனிசத்தின் வீழ்ச்சியோடு உலகில் புதிய உந்துதல்களைப்பெற்றிருக்கும் தேசியவாதம், அடிப்படைவாதம் என்பவற்றோடு மற்றுமொரு விவகாரம்- மனித உரிமைகள் - முன்னணிக்கு வந்திருப்பதை விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். இன்று, புதிய உலக ஒழுங்கின் கீழ் மனிதஉரிமைகள் ஒரு அரசியல் விவகாரமாக (Political - issue) வளர்ச்சி கண்டிருப்பதாக மேற்படி விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

கெடுபிடிப் போர் காலத்தில் இரு வல்லரசுகளும் மாறிமாறி தமக்கு ஆதரவான அரசுகள், குழுக்களின் மனித உரிமை மீறல்களைப் பாது காத்தும், நியாயப்படுத்தியும் வந்தன. ஆனால் கெடுபிடிப்போரின் முடிவும், தொடர்பு சாதனத் துறையில் உண்டான மகத்தான கூர்ப்பும் ஒரே புள்ளியில் சந்தித்த ஒரு தருணத்தில் புதிய உலக ஒழுங்கின் கீழ் மனித உரிமைகள் தவிர்க்க முடியாத தீர்க்கமான பங்கை வகிக்கத் தொடங்கின.

இப்பத்தியில் கடந்தவாரம் கூறப்பட்டதுபோல,தொடர்பு சாதனங்களின் வியாபகத் தன்மைதான் மனித உரிமைகள் தொடர்பாக இன்று உலகிற்குள்ள ஒரே பாதுகாப்பு ஏற்பாடு, பூமியின் மனச்சாட்சி என்ற ஒன்றைப்பற்றி நாம் கதைப்போமாக இருந்தால் தவிர்க்க முடியாதபடி தொடர்பு சாதனங்களைப் பற்றித்தான் நாம் கதைக்க வேண்டியிருக்கும்.

இன்று மூன்றாம் உலக நாடுகளிற்கு உதவிவரும் முதலாம் உலகநாடுகள் உதவிகளை மனித உரிமைகளோடு தொடர்பு படுத்தி வருகின்றன. இந்த வகையில் கடந்த தசாப்தத்தில் உலகிலேயே மிகமோசமான மனிதஉரிமை மீறல்களின் களமாக அடையாளம் காணப்பட்டிருக்கும் இலங்கைத்தீவும் இத்தகைய உதவிவழங்கும் நாடுகளின் நெருக்குதல்களிற்கு உள்ளாகத் தொடங்கியுள்ளது.

கெடுபிடிப்போர் முடியுந்தறுவாயில் மாற்றங்கள் பெருமளவு ஐரோப்பாவில் நிகழ்ந்தன. அதேசமயம் தென்னாசியாவில் இரண்டு முக்கிய மாற்றங்கள் இலங்கைத்தீவில் நிகழ்ந்தன. ஒன்று, கெடுபிடிப்போரின் கடைசிப்படை இறக்கம். இந்தியா தனது துருப்புக்களை ஐ.பி.கே.எவ். என்ற பெயரில் இலங்கைக்குள் இறக்கியது. இரண்டாவது, கெடுபிடிப்போரின் கடைசி இடது சாரிப் புரட்சி (ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி) மிகக் கொடுமையான விதத்தில் நசுக்கப்பட்டது.

ஜே.வி.பியைப் பிரேமதாஸ அரசு நசுக்கிய விதம் கடந்த தசாப்தத்தில் மட்டுமல்ல, அதற்கு முந்திய பல தசாப்தங்களோடும் ஒப்பிடுகையில்ஒடுக்குமுறையாளர்களுக்கு ஒரு பிரமிப்பூட்டும் முன்னுதாரணமாக அமைந்தது. ஆனால் மனித உரிமை இயக்கங்களை அது திடுக்கிடச் செய்தது.

அதோடு இலங்கைத்தீவு உலகிலேயே அதிகம்பேர் காணாமல் போன ஒரு தீவாக மாறியது. மனித உரிமை இயக்கங்களின் புள்ளிவிபரங்களின் படி காணாமல் போனவர்கள் சுமார் 12,000 பேர். ஆனால் உத்தியோகப்பற்றற்ற தகவல்களின் படி காணாமல் போனவர்கள் சுமார் 60,000 என்று கூறப்படுகிறது. எண்பதுகளின் இறுதிக்கூறில் மிகவும் குறுகிய காலப்பகுதியில்உலகின்கவனம் முடியும் கெடுபிடிப்போரின் மீதும், ஐ. பி. கே. எவ். இன் மீதும் குவிக்கப்பட்டிருந்த ஒரு காலப்பகுதியில் மேற்படி 12,000 பேர்களும் காணாமல் போய் விட்டார்கள். இது இப்பொழுது பிரேமதாஸா அரசை அவரிடம் பரிவுடைய மேற்கத்தைய நாடுகளால் கூட ஒரு கட்டத்திற்கும் மேல் பாதுகாக்க முடியாத ஒரு நிலையை உண்டாக்கியுள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து பிரேமதாஸா ஐ.நாவின்மனித உரிமைகள் தொடர்பான பரிந்துரைகளை பகுதிபகுதியாக ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தங்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஐ.நாவின் மனித உரிமைகள் குழுவின் முன் சிறிலங்காவின் அதிகாரிகள் அவசரகாலச் சட்டத்தின் கடுமையைச் சற்றுக் குறைப்பதற்கு ஒப்புக்கொண்டார்கள். கடந்தவாரம் சித்திரவதைக் கெதிரான ஐ.நா. பிரகடனத்தில் கைச்சாத்திடுவதற்கு சிறிலங்காசம்மதித்திருக்கிறது. அத்தோடு ஐ. நா. வின் பார்வையாளர்கள் தீவுக்குள் வருவதற்கு அனுமதியும் தரப்பட்டுள்ளது.

வரும் யூன் 12இல் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பாரிசில் கூட இருக்கின்

நிலாந்தன்

றன. இம் மகாநாட்டினை நோக்கிய முன்னேற்பாடாகவே கொழும்பு மனித உரிமைகள் தொடர்பாக சில தூலமான முன்னேற்றங்களைக் காட்ட முயல்கிறது என்று கருத இடமுண்டு. கடந்த ஆண்டில் உதவி வழங்கும் நாடுகள் மனித உரிமை இயக்கங்களின் குற்றச்சாட்டுக்களையும் மீறி பிரேமதாஸாவைப் பாதுகாத்தன. இது பற்றி அப்போது கருத்துத் தெரிவித்திருந்த விமர்சகர்கள், கொழும்பு அரசியலில் மேலாண்மை பெற்றுவரும் ராணுவத்திடமிருந்து பிரேமதாஸாவைப் பாதுகாப்பதற்காகத்தான் மேற்படி நாடுகள் அவர் கேட்டதை விடவும் கூடுதல் நிதியைத் தந்தன என்று கூறினார்கள் இரண்டாவது ஈழப் போரில் கொழும்பில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக வளர்ச்சி கண்டிருக்கும் ராணுவம் திடீர் சதிப் புரட்சியில் ஈடுபடலாம் என்ற ஊகங்கள் கடந்த ஆண்டிலிருந்து ஆரம்பித்து விட்டன.

பிரேமதாஸாராணுவத்தைத் தனது பிடிக்குள் வைத்திருக்க கடந்த ஆண்டு முழுவதும் ராணுவ உயர் பீடத்தில் பல தொடர்ச்சியான மாற்றங்களைச் செய்தார். மேற்படி மாற்றங்களினாலும் உயர் தளபதிகள் கொல்லப்பட்டதினாலும் ராணுவ உயர்பீடம் இந்த ஆண்டில் ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டையும்விட பலவீனப்பட்டிருக்கிறது. எனினும் கொழும்பில் அது தொடர்ந்தும் ஒரு தீர்மானிக்கும் சக்தியாகத்தான் காணப்படுகிறது. உதவி வழங்கும் நாடுகள் இந்தஆண்டிலும்பிரேமதாஸாவைப் பாதுகாக்க வேண்டிய தேவை உண்டு. ஆனால் மேற்படி நாடுகள்,ராணுவம் இப்பொழுது பெற்றிருக்கும் மேலாண்மை நிலையைக்குறைத்து துருப்புக்களை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளிலிருந்து பாதுகாக்கக் கூடிய சட்டங்களை மாற்றும்படி அல்லது நீக்கும்படி வற்புறுத்தி வருவதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதவி வழங்கும் நாடுகள் ராணுவம் ஒரு தீர்மானிக்கும் சக்தியாகத் தொடர்ந்துமிருப்பதை, அது சதிப்புரட்சிகளைச் செய்யும் வலிமையுடையதாக வளர்ந்து வருவதை விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது. முக்கிய காரணம்: ராணுவ ஆட்சிமுதலீடுகளிற்கு உத்தரவாதமானது அல்ல என்று மேற்படி நாடுகள் கருதுவதுதான்.

பிரேமதாஸா, கொழும்பை, பாங்கொக் நகரைப் போன்று கவர்ச்சியான ஒரு முதலீட்டு மையமாக மாற்றுவதில் திடசித்தத்தோடு காணப்படுகிறார். எனவே உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்த வேண்டிய ஒரு நிலை. அதே நேரம் இத்தேர்தல் ஆண்டில் உள்நாட்டில் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாகக் காணப்படும் ராணுவத்தைப் பகைக்க முடியாத நிலை.

ராணுவம் தொடர்பான அவரது அணுகுமுறை இரட்டைத் தன்மை வாய்ந்தது. ஒருபுறம் புலிகளுடனான யுத்தத்தில் ராணுவம்மேலாண்மை பெற்றிருப்பதை அவர் விரும்புகிறார். மறுபுறம் மேற்படி மேலாண்மை தனக்கு ஆபத்தானதாகத் திரும்பாமலிருப்பதை உறுதி செய்யவும் விரும்புகிறார். இந்நிலையில் ராணுவத்தின் பற்களையும், நகங்களையும் பாதுகாக்கும் சட்டங்கள் சிலதைத் தளர்த்த முயல்வதும், இது தொடர்பான சர்வதேச பிரகடனங்களோடு சேர்ந்து விடத் தீர்மானித்திருப்பதும், ராணுவத்திற்கும் அவரிற்குமான உறவில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கக் கூடியது.

தவிர, தென்னிலங்கையில் இது ஓரளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது. ஆனால் தமிழர் நிலத்தில் அவ்வாறில்லை. ஈழப்போர் சட்டங்களால் கையாளப்படும் ஒரு கட்டத்தைத் தாண்டி எப்பொழுதோ வந்துவிட்டது. கடந்த தசாப்தம் முழுவதும் அவசரகாலச்சட்டங்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற சட்டங்களின் பாதுகாப்பில் ராணுவம் திடீரென்று வீங்கிப் போயுள்ளது. ராணுவத்தில் இப்போதுள்ள பெரும்பாலான சிப்பாய்களும் இளநிலை அதிகாரிகளும் கடந்த பத்தாண்டுகளிற்குள் உள்வாங்கப்பட்டவர்கள்தான் இவர்களிடம் சட்டம், ஒழுங்கு மனித உரிமைகள் போன்ற எதையும் போரின் வெற்றிகளுக்காக மீறத்தயாரான ஒரு மனோநிலையைத்தான் கடந்த தசாப்தம் முழுவதும் அரசியல் வாதிகள் வளர்த்து வந்துள்ளார்கள். இன்றுயாருக்கும் கட்டுப்படாத ஒரு பூதமாக ராணுவம் வளர்ந்து செல்கிறது. யுத்தம் ராணுவத்தை வளர்க்கிறது, ராணுவம் யுத்தத்தை வளர்க்கிறது. பிரச்சினை எல்லாருடைய கைகளையும் மீறிச் சென்று விட்டது.

மனித உரிமைகள் தொடர்பாக உலகில் உருவாகிவரும் புதிய, உற்சாகமூட்டும் மாற்றங்களோடு சேர்ந்து அவற்றின் வேகத்தில் ஓட பிரேமதாஸாவால் முடியாது ஆனால், அத்தகைய மாற்றங்களிலிருந்து தனிமைப்பட்டு நிற்கவும் அவரால் முடியாது.

## இரக்கத்துக்...

கப்பட்ட ''சுப்பர் சொனிக்'' சண்டை விமானங்கள் சில பாடசாலை கட்டடங்களை இடித்ததோடுசரியாகப்போயுள்ளது. இதை விஞ்சி இந்த ஜெட்விமானங்களின்சாதனை சித்தன்கேணியில் குடிமக்கள் மீதான குண்டுவீச்சுடன் முடிகிறது.

42 வருடங்களுக்கு முன்பு ஒற்றை இஞ்சின் விமானத்துடன் ஆரம்பமான சிறிலங்கா வான்படைஇன்று எம்.ஐ.8உலங்குவானூர்திகள், புக்காரா, சுப்பசொனிக் சண்டை விமானங்கள்என்று பெருத்திருந்தாலும் அதன் சாதனைகளை விட இழப்புகளே அதிகமாக இருக்கிறது.

1990 ஜூனில் தொடங்கிய இரண்டாவது ஈழப்போரின் பின்பு சிங்கள வான்படை அதன் முதுகெலும்பு உடைந்து போகுமளவுக்கு அடி வாங்கி இருக்கிறது.

போர் தொடங்கிய மூன்றாவது மாதம் 13.9.1990இல் யாழ்.கோட்டையில்மாசெற்றி குண்டு வீசசு விமானம் ஒன்று புலிகளால்வீழ்த்தப்பட்டதுடன் வான்படையின் அழிவுகள் ஆரம்பமானது. அதற்கு முன்பே பல இடங்களில்காயப்பட்டு பல வானூர்திகள் சேதமடைந்திருந்தாலும் அவற்றை இங்குகருத்தில்எடுக்கத்தேவை இல்லை.

அதற்கு மறுவருடம் சிறிலங்கா படையினரின் 'வன்னிவிக்ரம்' நடவடிக்கையின் போது (14-21. ஜூன் 1991) 'பெல்' ரக உலங்கு வானூர்தி ஒன்று புலிகளால் வீழ்த்தப்பட்டது.

1992 பொறுத்தவரை சிறிலங்கா வான்படைக்கு அழிவுகளின் ஆண்டாகவே இருக்கிறது. ஆனையிறவு வெளியில் வை.8 போக்கு வரத்து விமானம் வீழ்த்தப்பட்டதும்,மட்டு கஜபாரா நடவடிக்கையில் உலங்கு வானூர்தி ஒன்றை இழந்ததும் வான்படையினருக்கு பெரும் இழப்பாக இருந்தது என்றால்சீனன்குடாவிமானதளக் குண்டு வெடிப்பு சிறிலங்கா வான்படையினருக்கு மேல் விழுந்த பேரிடியாகவே இருக்கிறது.

இன்று பெருமளவுபணத்தை கொட்டி சிறிலங்கா வான்படை புதிய நவீன போர்விமானங்களால் வளர்க்கப்பட்டுள்ளது. அதைவிட 1.400 பேருடன் ஆரம்பமான வான்படை இன்று 14.000பேராகவும் வளர்ச்சி கண்டுள்ளது. ஆனாலும் வான்படையினரின் சாதனை; பி.பி.சி செய்தி ஒலிபரப்பு சேவைக்கு.'அரசுதரைபடைப்போரில் தம்மை ஈடுபடுமாறு நிர்பந்திப்பதாயும் அதிலிருந்து தம்மை காப்பாற்றி விடும்படியும்'' வேண்டுப் ஓலத்திலேயே முடிந்துள்ளது.

## நிதர்சனம்...

னது மாணிக்கத்தாருக்குத் தெளிவாகக் கேட்டது. தமிழன் எண்டு சொல்ல வெட்கப்படும் இவனைப் பெற்றதற்காக வேதனைப்பட்டார். கோபத்தில் உடல்நடுங்கியது. ''என்னடா சொன்னனி, தமிழன் எண்டுசொல்ல வெட்கமாயிருக்கா, அப்ப என்ன அப்பன் எண்டு சொல்லவும் நீ வெட்கப்பட கன நளா காது.'' கத்திய மாணிக்கத்தார் நெஞ்சைப்பிடித்தபடி அப்படியே இருந்துவிட்டார்.

நாட்கள் நகர நகர கதைக்க முடியாது நெஞ்சு வலியால் அவர் படும் பாடடை கனகத்தாலோ, பிள்ளைகளாலோ பார்த்துக்கொண்டிருக்க முடியாதிருந்தது. கண்ணீர் விடுவதைத் தவிர வேறு ஒன்றும் அவர்களால் செய்ய முடியவில்லை.இப்போது நிலைமை மிக மோசமாகி இந்த நிமிடமோ, அடுத்த நிமிடமோ என உயிர் ஊசலாடியபடியிருந்தது. சுற்றிவர மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள். அவருக்குத் திருப்தியில்லை. எதையோ பார்க்கத் துடிக்கும் அவர் முகம் மெதுவாக மனைவியிடம் முனகி முனகி ஏதோ சொல்ல; கனகு அவருடைய உடுப்புகளுக்கிடையில்எதையோதேடினாள். கணவரின் இறுதி ஆசையை நிறைவேற்றி வைப்பதில் அவளின் ஆவல், முகத்தில் தெரிந்தது.

பிள்ளைகள்ஒவ்வொருவரும் என்னவென்று புரியாது மனதுக்குள் வெவ்வேறான கற்பனைகளுடனிருக்க, கனகு கையிலே ஒருசிறியபொலித்தீன்தாளால் சுற்றிய பொருளுடன் வந்து மாணிக்கத்தாரின் அருகில் அதைப் பிரித்ததும் எல்லோருடைய கண்களும் அகலவிரிய அவர்களால் நம்ப முடியாதிருந்தது. மாணிக்கத்தார் கைகளால் ஆசைதீர அந்த செம்பாட்டு மண்ணை தொட்டுப் பார்த்தார். அவர் முகத்தில் திருப்தியின் ரேகைகள் தெளிவாகத் தெரிந்தன. ''என்டைக்காவது ஒரு நாள் என்ர பேரப்பிள்ளைகள் இல்லாட்டியும் அவையட பிள்ளைகளாவது இந்த மண்ணிலஆசை தீர விளையாடத்தான் போகினம்'' முனகலாய் வெளிவந்தன வார்த்தைகள். மாணிக்கத்தாருக்கு கண்களில் இரட்டைப்பனைகளும், வயல்வெளிகளும் தெளிவாகத் தெரிந்து மங்கி மங்கிப் போயின. இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் தலையணையில் விழ நம்பிக்கையோடு அவர்கண்கள் மூடிக்கொண்டன. ○

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
17-06-1967

வீரச்சாவு
19-03-1991

### லெப்டினன்ட் யுறோம்
[மாசில்லாமணி அந்தோனிதாஸ்]

தம்பி நீ!..

சிவந்த இம்மண்ணின் சுதந்திரம் விரும்பியே
சிங்களப் படைமுன் சிறுத்தையாய் நின்றே
சிலாவத்துறையிலே செங்களமாடினாய்!
சரித்திரம் படைக்கவே சாவினைஅணைத்தாய்!..

– உன்நினைவுகளுடன் எந்நாளும் வாழும்!...

16/4 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(சி-6224)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
24.11.1963

இறப்பு
15.03.1988

செல்வி

### நவரட்ணம் லோகேஸ்வரி (தேவி)

திதி:- 19. 03. 1993

தேவி உன் வாய் மொழி கேட்டு
வாழ்ந்திருந்தோம்
தேவி உன் கருவிழி கண்டு
பெருமையுற்றிருந்தோம்
தேவி உன் கார் குழல் பார்த்து
குளிர்ச்சியடைந்திருந்தோம்
தேவி உன் திருமேனி கண்டு
தேறியிருந்தோம்
தேவி உன் பிரிவுத் துயர்
தாங்காது தவிக்கின்றோம்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

–குடும்பத்தினர்.
(4497)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பொன்னன்

கைதடி மத்தியை பிறப்பிடமாக கொண்ட ஆறுமுகம் பொன்னன் 18-03-1993 அன்றுகாலமாகிவிட்டார். இவர் ஆறுமுகம் சின்னப்பெட்டை தம்பதிகளின் அன்பு மகனும் குஞ்சியின் அன்புக் கணவரும், கிருஷ்ணன், கந்தசாமி சுவிஸ் ) ஆனந்தராணி, சின்னமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம், குமார், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், அப்பாக்குட்டி (விசுவமடு), ஆனந்தி, வெள்ளைச்சியின் அன்புச் சகோதரரும், சின்னவன், குழந்தை, மணி ஆகியோரின் மைத்துனரும், சுகுமார், சுகிர்தா, கார்த்திகா, சாளினி, சுதர்மன், மதன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 19-03-1993 காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஊத்தலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
பொ. கிருஷ்ணன்
( மகன் )

வளர்மதி வீதி,
கைதடி மத்தி.
( 4518 )

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்கத்தா குண்டுவெடிப்பு; முதலமைச்சருக்கு தொடர்பு

கல்கத்தாவில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் மேற்குவங்க முதலமைச்சருக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குண்டுவெடிப்புத் தொடர்பாக நேற்று நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு கல்கத்தா நீதிமன்றத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் மீது 60 பேர் கொலைமற்றும் வெடிவிபத்து தொடர்பாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத சூதாட்ட கேளிக்கைகளை நடாத்தும் கூட்டத்தின் தலைவர், மேற்குவங்க முதலமைச்சர் ஜோதி பாசுவுடன் லண்டன்வரை பயணம் செய்துள்ளதாகப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

இச்சூதாட்டத் தலைவருக்கும் தற்போது இக்குண்டு வெடிப்புத் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள நபருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே மேற்படி சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஆயினும் முதலமைச்சர்சார்பில்அதிகாரிஒருவர்இக்கூற்றை மறுத்துள்ளார். இதுதொடர்பாகக் காவல்துறை அதிகாரிகளை வினாவியபோது, அவர் இத்தகைய சம்பவங்களுக்குத் தொடர்பு ஏதும் இருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்றனர்.

அத்துடன் சாதாரணமாக அரசியல்வாதிகளுக்கு இத்தகைய குற்றவாளிக் கும்பல்களுடன் தொடர்பிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாகவும் கூறினார்.

## பம்பாய் குண்டுவெடிப்பு தொடர்புடையவர் கைது

(பம்பாய்)

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களில் ஒருவர் பிளாஸ்டிக் வெடிகுண்டுகளை ஜீப் ஒன்றில் மத்திய பம்பாய்ப் பகுதிக்கு எடுத்துச் சென்றதாக பம்பாய் பொலீஸ் ஆணையாளர் அமர்ஜித்சிங் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## தமிழக கொள்ளைகளில் இலங்கையர் பங்கு

### அதிகாரி தேவாரம் தெரிவிப்பு

[சென்னை]

தமிழகத்தில் நடைபெற்றுள்ள பல கொள்ளைகளில் இலங்கை தமிழ் அகதிகள்பங்கு பற்றியிருப்பதாக தமிழக பொலீஸ் மேலதிக இயக்குனர் டபிள்யூ. ஐ. தேவாரம் குற்றஞ்சாட்டியுள்ளார் மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இலங்கை அகதிகள் தொடர்ந்து இவ்வாறு நடந்து கொண்டால் அவர்கள் முகாமைவிட்டு வெளியேறாதபடி தடைசெய்யப்படுவர் என்றும் எச்சரித்தார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இன்னும்சிலர் செயற்படுவதாகவும் தேவாரம் மேலும் தெரிவித்தார்.

தகவல் சுதந்திரம் கோரி

## பத்திரிகையாளர்கள் கொழும்பில் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

தகவல் நிறுவனங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும்என்றகோரிக்கையை முன்வைத்து கொழும்பில் 2000க்கு மேற்பட்டோர் சத்தியாக் கிரகம் செய்தனர்.

தகவல் நிறுவனத்தினர் திட்டமிட்டு தாக்கப்படுவதாகவும் மறைமுகமாக மிரட்டல் போன்ற சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளன. எனவே தகவல்துறை பூரண சுதந்திரமாக இயங்கஅனுமதிக்கவேண்டும் என்று கோரி சத்தியாக் கிரகம் நடைபெற்றது.

இச் சத்தியாக் கிரகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர், தகவல் துறையினர், துறவிமார் பலர் கலந்து கொண்டனர்.

## தொப்பிகல காட்டில் நடவடிக்கை தொடர்கிறதாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காட்டுப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல்களை நடாத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு தொப்பிகல காட்டுப்பகுதியில் கடந்த சில நாட்களாக சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல்களை நடாத்தி வருவதாக கூட்டுப்படை தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் அலங்கம நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

## சென்றல்-சென்.ஜோன்ஸ் இன்று கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

சென்றல் - சென் ஜோன்ஸ் 89- வது கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் யாழ். மத்திய கல்லூரிக்கு எஸ். அகாஸ் அணித்தலைவராகத் திகழ்கிறார்.

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு ரி. பீஸ்மன் அணித்தலைவராகத் திகழ்கிறார். இதுவரை நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி 32 தடவைகள் வெற்றியீட்டியிருக்கிறது. யாழ். மத்திய கல்லூரி 20 தடவைகள் வெற்றியீட்டியிருக்கிறது. மிகுதியான போட்டிகள் யாவும்வெற்றி தோல்வியின்றி முடிவுற்றன.

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க அங்கத்தவர்கள் இரு நாள் ஆட்டத்திற்கு மத்தியஸ்தம் வகிப்பர். (42)

அன்னை

தல்களில் தியாகச்சுடர் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டு மலர்கள் தூவப்பட்டு அணையாத தீபம் ஏற்றிவைக்கப்பட்டு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுநல

சமயத்திலும் ஆராயவில்லை என்றும் தேர்தல் தொடர்பாக முடிவுகளை தேர்தல் திணைக்களமே முடிவு செய்யும் என்றும் தெரிவித்துள்ளார்.

4 இராணுவம்

னர் கொல்லப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் அங்கமன தெரிவித்துள்ளார்.

ஏப்ரல்

தல் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபைத்தேர்தல் குறித்து இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை என தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று ஏழு மாகாண சபைகளும் விசேட அரச வர்த்தமானி அறிவிப்பு மூலம் கலைக்கப்பட்டமை தெரிந்ததே.

வீரச்சாவு

தணிகாசலம் விமலநாதன் - களுவங்கேணி மட்டக்களப்பு ) க்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## போத்தல் மூடி

750 மி. லீ. சாராயப் போத்தல்களுக்கான மூடிகள் (பழைய, புதிய) தேவை. வைத்திருப்போர் இல. 499, காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாச அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண
தெ. ப. பொ. கூ.
சங்கங்களின் சமாசம்
யாழ்ப்பாணம்.
(சி-6226)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 18-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8701

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்
இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1735, 27-6024, 26-6796, 24-9830, 28-6546, 26-4436, 28-3306, 42-6511, 41-8467, 41-9167, 26-4579, 28-2049, 26-8497, 27-5799 27-9779, 22-4862, 26-0512, 24-4323, 27-2040, 42-1721, 24-6480, 26-3528, 24-5703.